

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.     www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 மீனம் நல்லோரை பங்குனித் திங்கள் 18ம் நாள் (01-04-2026 புதன்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722

# ஆரூரா! தியாகேசா!



ஆழித்தேரோட்டம் - 2026

படம்: Frames by AJS

# நல்லூர் கைலாசநாத பிள்ளையார் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா வழிபாடுகள்















படங்கள் - ஐ.சிவசாந்தன்




**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org



# ஆடு தலையாக வரும் இளவேனில் சித்திரையே தமிழர் புத்தாண்டு சித் 1 ஆம் நாள் (14-04-26) செவ்வாய் காலை 8.40 மணிக்கு பிறக்கிறது

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

இளவேனில் சித்திரையே தமிழர் புத்தாண்டு ஆகும். இம்முறை அருட்டோற்றம் (பராபாவ) ஆண்டு சித்திரை 1 ஆம் நாள் அதாவது 14ம் திகதி (14-04-2026) செவ்வாய்க்கிழமை இலங்கை இந்திய நேரப்படி காலை 8.40 மணிக்குப் பிறக்கிறது. இது சித்திரைத் திங்கள் தேய்பிறை பதின்மும்மை பிறைநாளும் (துவாதசி), சதய விண்மீனும் கொண்ட நன்னாளாகும். அன்று அதிகாலை 4.40 மணியிலிருந்து நண்பகல் 12.40 மணிவரை புண்ணியகாலமாகும்.

தமிழர்களின் பருவ காலங்களில் இளவேனில் காலம் **"வசந்த காலம்"** சூரியன் தனது சுற்றுப் பாதையில் சரியாக கிழக்கு திசையிலிருந்து தன் பயணத்தை தொடங்கும் காலமாகும். கதிரவனின் ஆரம்ப நாழிகை முதல் நாளே, தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடப்படுகிறது. சித்திரைத் திங்களே பழந்தமிழரின் புத்தாண்டு என்பதை நெடுநல்வாடை சிறப்பாக எடுத்துரைக்கிறது. **"திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக விண்ணூர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலம்"** என விளக்கியுள்ளார் நக்கீரர் அவர்கள். இங்கு ஆடு தலையாக என்பது, மேழம் தான் ஓரையில் முதலாவது மற்றும் தலையானது. அதுவே ஆண்டின் பிறப்பாகும் என்பதாகும்.

**திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக (பத்து.160),**

என்று சங்கத்தமிழ் நக்கீரர் (கி.பி 250) பத்துப்பாட்டு நெடுநல்வாடையில், ஆடுஃமேழ ஓரை முதலாக இருப்பதை உறுதிசெய்வார். வருடம் , வருடை ஸ்ரீ மலையாடு, மேடம் அல்லது மேழம் எனும் ஆட்டைக் குறிக்கும் சொல்லாகவே நிற்கிறது.

## தமிழரின் தொடராண்டு

தொடராண்டுகளை ஒரு மனிதனை அல்லது கருவில் தோன்றியோரைச் சார்ந்து அல்லது ஒரு இலக்கியம் சார்ந்து கணிப்பது உண்மையில் அறிவின் ஆழத்தினை காட்டாத செயலாகும். தொடராண்டு என்பதனை அறிவியலின் துணைகொண்டு ஊழியின் அடிப்படையில் கணக்கிடவேண்டும். ஆகவே திருவள்ளுவர் ஆண்டு என்பது தமிழர் தொடராண்டு (2057) என்று பாவிப்பதும் தமிழரின் அறிவியலை குறைத்துவிடும்.

ஊழி என்பதை இயற்கை நிலைப்பெயராமை அல்லது தடம்பெயராமை என்றும், இயற்கை பெருந்தோன்றல்களாகவும் தமிழர்கள் கண்டனர். ஊழி என்றால் முந்தைய இயற்கை விதிகள் அழிந்து புதிய இயற்கை பிறத்தல் என்றும் பொருள் கொள்ளலாம். இயற்கை தூரகால அறிவியலை ஊழி என்று தமிழர்கள் அழைத்தார்கள்.

இதன் அடிப்படையில் பிறக்கப்போகும் ஆண்டு மேழ விழுகம்பத் தொடராண்டு அல்லது மேழ விழுகம் ஊழி ஆண்டு 2300 என்ற அடிப்படையில் வரும்.

குறிப்பு: கனடா,அமெரிக்கா 13-04-2-26 இரவு 23.10 மணி, இலண்டன் 14-04-2026 அதிகாலை 4.11 மணி, ஐரோப்பா அதிகாலை 5.10 மணி, ஒசுத்திரேலியா 14-04-2026 மாலை 13.10 மணி, நியூசிலாந்து 14-04-2026 மாலை 15.10 மணி, சிங்கப்பூர்,மலேசியா 14-04-2026 பகல் 11.10 மணியளவில் புதுவருடம் பிறக்கிறது.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**





**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(02-03-2026) – தென்னாட்டின் அறுபத்து ஏழாவது திங்கள் இதழ் வெளியீடு, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299, கும்பம் நல்லோரை, மாசித் திங்கள் 18 ஆம் நாள் (02.03.2026 – திங்கட்கிழமை) மாசிமக நன்னாளில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியர். மாரிமுத்து வேதநாதன் ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்த துறைத் தலைவர் கலாநிதி. திருச்செல்வம் செல்வமனோகரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி. ஜெயேந்திரன் அவர்கள், பெரியபுலம் மகா வித்தியாலய அதிபர் சிவத்திரு. தருமராஜ் சிறிமுரளி அவர்கள் ஆகிய சிறப்பு விருந்தினர்களும் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் பேராசிரியர். மாரிமுத்து வேதநாதன் ஐயா அவர்களுக்கு முதல் இதழை வழங்கி, தென்னாட்டின் அறுபத்து ஏழாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து, ஏனையோருக்கும் இதழ்கள் வழங்கப்பட்டு, அடியார்களுக்கு அமுது செய்வித்தலுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

(09-03-2026) – அமரர். செல்லத்துரை சிவபாதசுந்தரம் அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (10-03-2026) – சிட்னி பெண்டில்கில் நகரத்தில் சிட்னி பழமுதிர்ச்சோலை எனும் பிரமாண்ட தமிழ் வணிக நிலையத்தின் தொடக்க வழிபாடுகள் தென்னாடு முதல்வர் அவர்களால் செந்தமிழில் ஆற்றி வைக்கப்பட்டன. அன்றையநாளில் தமிழர் பண்பாட்டின் வழி பால் காய்ச்சி பொங்கல் வைத்து அம்மையப்பரை வழிபட்டு, வணிக நிறுவனத்தின் நலனுக்காக இறைவனை வேண்டி, கிரக மாற்றங்களின் பாதிப்புகளில் இருந்து விடுபட்டு மேன்மை பெற **"வேயுறு தோளி பங்கன்"** பதிகமும் ஓதப்பட்டது.

(16-03-2026) – பங்குனித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (24-03-2026) – அமரர். தையல்நாயகி கனகரட்ணம் அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (29-03-2026) – எங்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில், கடந்த பங்குனித் திங்கள் 15 ஆம் நாள், ஆயிலியம் நாண்மீன் கூடிய யோகர் சுவாமிகளின் குருபூசை நன்னாளில், **மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் விளங்க வேண்டியும், இலங்கையில் சைவ ஆதீன மரபு மீண்டும் தழைத்தோங்கவும், பல சைவ ஆதீனங்கள் உருவாகவும் குறிப்பாக நல்லை ஆதீனத்தில் மூன்றாவது சன்னிதானங்கள் ஆட்சிபீடம் ஏற வேண்டியும், உலகம் குறிப்பாக இலங்கை சார் சைவ அமைப்புகள் சைவம் வளர்க்கும் பணியில் ஒற்றுமையாக ஒருமித்து இயங்க வேண்டியும்** விண்ணப்பம் வைத்து, இடர்களையும் திருப்பதிகங்களை முற்றோதல் செய்து வழிபடத் திருவருள் கூட்டியிருந்தது. காலை 9 மணியளவில் விநாயகர் வழிபாட்டுடன் வேள்வி ஆரம்பமாகி, எம்பெருமானுக்கு திருமஞ்சனம் செய்யப்பட்டு திருமுறைகள் விண்ணப்பம் செய்யப்பட்டன.

விண்ணப்பத்தைத் தொடர்ந்து, ஐம்பூதநாதப் பெருமானுக்கு சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று, தவத்திரு. யோகர் சுவாமிகளின் குருபூசை வழிபாடுகளும் சிறப்பாக இடம்பெற்றன. (29-03-2026) – யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில் நான்காம் ஆண்டு நிறைவு சங்குநீராட்டு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (30-03-2026) – பங்குனித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# அறநெறி ஆசிரியர்களுக்கு தொழில்சார் தகைமை திட்டம்



அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் தொழில் அடிப்படையில் உயர்நிலை பெறுவதற்காக அவர்களுக்குகென தொழில்சார் தகைமை (NVQ) திட்டத்தை கொண்டுவர வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்து சமய பாட ஆலோசனை சபையினர் பிரதமரிடம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இந்த அமைப்பினரின் சார்பாக சிவசீர் இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா அவர்கள், மதிப்பிற்குரிய பிரதமர் ஹறிணி அமர சூரிய அம்மையாரிடம் இக்கோரிக்கையை முன்வைத்தார். பிரதமர் ஹறிணி அமரசூரிய தலைமையில் அண்மையில் நடைபெற்றிருந்த கலந்துரையாடலிலே, இந்த ஆலோசனை முன்வைக்கப்பட்டது. இச்சந்திப்பில், சைவ சமய பாட அடிப்படையிலான ஊக்குவிப்பு திட்டங்களும் ஆசிரியர்களுக்கான விசேட திட்டங்களும் கலந்துரையாடப்பட்டன.

இதில் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் துலானி சமரக்கோன், சமயம் மற்றும் விழுமியக் கல்விக்கிளையின் கல்வியமைச்சின் பணிப்பாளர் திருமதி தர்ஷினி அமரசிங்க, கல்வியமைச்சின் பெருந்தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை பணிப்பாளர் சின்னையா ஜெயக்குமார், உதவி பணிப்பாளர் திருமதி சரிதா சுதாகரன், இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் அனிருத்தன் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். அத்துடன் இராமகிருஷ்ண மிஷன் சுவாமி அஜாரனந்தா, சின்மயா மிஷன் குணாதித்தானந்த சுவாமி, இந்து அமைப்பின் தலைவர் வைத்தீஸ்வரர் குருக்கள் மற்றும் இந்து சமய பாட ஆலோசனை சபையினர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருச்சிற்றம்பலம்

# “ஈழத்து துறவற சபை தோற்றுவிக்க வேண்டும்” என மருத்துவர் பரா நந்தகுமார் அவர்கள் வேண்டுகோள்



எம் ஈழத்து சைவத்தமிழ் பாரம்பரியத்தில் உருவாக்கப்பட்ட நல்லை ஆதீனம் அனைத்து ஈழத்து சைவசமயிகளின் தலைமை மடமாக 60 ஆண்டுகள் திகழ்ந்த பாரம்பரியம் பாதுகாக்கப்பட வேண்டும் ஈழத்து சுதேச துறவி பொறுப்பேற்கும் வரை, ஈழத்தில் தற்போதைய மூத்த சைவத்துறவிகளான தவத்திரு அகத்தியர் அடிகளார், தவத்திரு தொண்டு நாத சுவாமிகள், தவத்திரு வேலன் சுவாமிகள் கொண்டமைந்த துறவற சபை தோற்றுவித்து, அதன் கீழ் நிர்வாக சபை ஆதீனத்தில் திங்கள்தோறும் கூடி நாளாந்த தெய்வீக மானிடநேயப் பணிகளுடன் அதுவரை உயிர்ப்புடன் ஆதீனத்தை வைத்திருத்தல் காலத்தின் கட்டாயமாகும்

தொலைத்தூரத்திலிருந்து வரும் சைவ சமயிகளும் தங்கி தரித்து இளைப்பாறவும் சிவப்பணிகளும் அறப்பணிகளும் ஆதீனத்தை தலைமையிடமாக் கொண்டு நடைபெறவும், ஆதீனத்தில் களமைத்து கொடுக்கப்பட வேண்டும். அது அடையாத கதவாக எந்நேரமும் திறந்திருந்து பசிப்பிணியும் ஆன்ம தாகத்தையும் தீர்க்க வேண்டும். துறவறம் ஏற்க விரும்பவும் இளைஞருக்கும் பக்குவப்பட்ட பெரியோருக்கும் சைவசித்தாந்த செல்நெறியில் எம் ஈழத்து சைவத்துறவியரைக் கொண்டு எமது பாரம்பரியத்துடன் எந்தவித வர்க்க ஏற்றதாழ்வுகளுமின்றி பயிற்சி அளிக்கப்பட வேண்டும் அவ் அப்போது தேவையேற்படின் தமிழக ஆதீனங்களின் உதவியை நாடலாம் எம் துறவியர் அங்கு சென்றோ அவர்களை இங்கு வந்தோ மேலதிக சைவசித்தாந்த மரபு தழுவிய பயிற்சியை பெறலாம் வழங்கலாம்

எக்காரணம் கொண்டும் ஈழ மண்ணில் பிறக்காத எவரையும் எம் நல்லூர் பாரம்பரிய ஆதீனத்திற்கு துறவியாக நியமிப்பதை நாம் அனைவரும் எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. எம் தேசத்து இளைஞர் பலர் பல மடங்களில் மிசன்களில் துறவியாக உள்ள நிலையில் நிச்சயம் சரியான பொறிமுறையை உருவாக்கி, ஆதீனத்தை முழுமையான சுதந்திரத்துடன் வழிநடாத்த களம் அமைக்கும் போது, இளைஞர்கள் தியாகத்திருமகன்களாக முன் வருவர் இறை சிவன் நிச்சயமாக இந்த சிவபூமியிலிருந்து ஒருவரை தந்து அருள்வார். அதுவரை சிவபூமிப் பெரியோர்கள் பொறுத்தருளுமாறு அன்புரிமையுடன் வேண்டுகின்றோம் என சைவ மகா சபை பொதுச்செயலாளர் மருத்துவர் பரா நந்தகுமார் அவர்கள் தனது கருத்துக்களை முன்வைத்தது வலியுறுத்தியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

# வாழைச்சேனை பேத்தாழை
# அருள்மிகு பாலீசுவரர் சுவாமி திருக்கோயில் பெருந்திருவிழா 2026



சீரும் திருவும் பொழியும் சிவபூமியாகிய இலங்கை மணித்திருநாட்டில் கீழ்க்கரையில் இயற்கை எழில் கொஞ்சும் மட்டக்களப்பு மாவட்டத்தின் வட மேற்கில் சைவமும் தமிழும் தழைத்தோங்கி செழித்திருக்கும் கதிரவன் உதிக்கும் ஆதி சைவப் பெருங்குடியினர் செறிந்து வாழும் பதியாம் பேத்தாழை அருள்மிகு பாலீசுவரர் சுவாமி திருக்கோயில் 4ஆவது பெருந்திருவிழாஉலகநிறைவு ஆண்டு பங்குனித் திங்கள் 09 ஆம் நாள் (23-03-2026 திங்கட்கிழமை) ஐந்தாம் பிறையும் கார்த்திகை நாண்மீனும் சித்த ஒகமும் கூடிய காலை 10.30 மணியளவில் கொடியேற்றம் ஆரம்பமாகி, தொடர்ந்து 10 நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று, 01-04-2026 புதன்கிழமை நான்காம் பிறையும் உத்தரம் நாண்மீனும் கூடிய நிறைமதி நன்னாளில், வங்கக் கடல் கொஞ்சும் பாசிக்குடா இந்துமா சமுத்திரத்தில் தீர்த்தத் திருவிழாவுடன் எம் பெருமானின் பெருந்திருவிழா நிறைவு பெற்றது.

எம்பெருமானினின் திருவருளால் இம்முறை புதிய சித்திரத் தேர் வடிவமைக்கப்பட்டு, திருவருளுடன் திருத்தேர் உலா சிறப்பாக இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் இரண்டாவது சிவத்தேர் அமையப்பெற்ற சிவாலயமான பேத்தாழை அருள்மிகு பாலீசுவரர் திருக்கோயிலின் சிவத்தேரானது, யாழ்ப்பாணம் அராலியூர், சிற்பக் கலாரெத்தினம், சிற்பசிரோன்மணி பெருந்தச்சன் (ஸ்தபதி) சின்னத்தம்பி அமரசிங்கம் அவர்களின் முதன்மைச் சீடரான "சிற்பசிகரம், சிற்ப வபரிதி" பெருந்தச்சன் (ஸ்தபதி) கந்தையா உதயசூரியன் (கல்லமு) மற்றும் அவரது குழுவினரால் வடிவமைக்கப்பட்டு, கடந்த 29-03-2026 ஞாயிற்றுக்கிழமை அன்று சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

**திருச்சிற்றம்பலம்**

# இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின்
# வருடாந்த ஆய்வரங்கு 2026

















# பாடசாலைகளில் தேவையற்ற குழப்பங்களை தவிர்க்குமாறு ஆளுநர் அறிக்கை



பாடசாலைக் கட்டமைப்புக்குள் மத நல்லிணக்கத்தைப் பேணுவது தேவையற்ற குழப்பங்களைத் தவிர்க் கும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித் துள்ளார். வடக்கு மாகாணப் பாடசாலை களில் அனைத்து மாணவர்களுக்கு பைபிள் விநியோகிக்கப்பட இருந்தமை தொடர்பில் அண்மைய நாட்களாக எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை. ஜெயசந்திரன் அவர்களுக்கு ஆளுநர் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

வெளிநாட்டுத் தொண்டு நிறுவனமொன்றால் பாடசாலை மாணவர்களுக்கு பைபிள் வழங்குவது தொடர்பில் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தைக் கண்டித்து, இலங்கை சைவநெறிக் கழகம், ஆறுமுகநாவலர் சபை, சைவ மகா சபை ஆகிய சைவ அமைப்புக்கள் உரிய அதிகாரிகளுக்கு தங்களது கண்டனக் கடிதங்களை அனுப்பி இருந்தனர். செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் ஐயா அவர்களும் பத்திரிகை வாயிலாக கண்டனப் பதிவினை வெளியிட்டிருந்தார். மேலும் இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ. கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள், உருத்திரசேனை அமைப்பினர் ஆகியோர்களும் தங்களது கண்டன நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருந்த நிலையில், சிவசேனை அமைப்பினர் மறவன்புலவு சச்சிதானந்தன் ஐயா அவர்களின் வழிகாட்டுதலில் யாழ் காவல் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்து, தங்களின் கடுமையான கண்டனத்தை ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இதனையடுத்து வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை. ஜெயசந்திரன் அவர்களுக்கு, ஆளுநரால் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கப்பட்டு, குறித்த விநியோகமானது கிறித்தவ மாணவர்களுக்கு மாத்திரமே என மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளரால் திருத்தப்பட்ட கடிதம் வெளியிடப்பட்டது.

திருச்சிற்றம்பலம்

# கச்சதீவு கச்சேச்சரநாதர் திருக்கோயிலில் மீண்டும் திருப்பணி, குடமுழுக்கு செய்யவேண்டும்

## மறவன்புலவு சச்சிதானந்தன் அவர்கள் வலியுறுத்தல்




கச்சதீவில் 400 ஆண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட அருள்மிகு கயற்கண்ணி உடனாய கச்சேச்சரநாதர் திருக்கோயிலை மீண்டும் கட்டி குடமுழுக்கு செய்ய வேண்டுமென இலங்கை சிவசேனைத் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

400 ஆண்டுகளுக்கு முன் யாழ். சங்கிலி மன்னனைத் தோற்கடிக்க வந்த போர்த்துக்கேயப் படை, நெடுந்தீவில் குஞ்சலி வீரர்களால் தாக்கப்பட்டபோது கச்சதீவில் தஞ்சம் புகுந்து அங்கிருந்த பழமைவாய்ந்த சிவன்கோயிலைத் தரைமட்டமாக்கியது. காலப்போக்கில் அங்கு கத்தோலிக்க வழிபாட்டு மரபு தோன்றினாலும், மதம் மாறாத சைவர்கள் இன்றும் அக்கோயில் இருந்த இடத்தில் அண்ணமார் (சிவனின் சூலம்) திருமேனி வைத்து வழிபட்டு வருகின்றனர்.

பத்தாயிரம் ஆண்டுத் தொன்மை யுடைய இத்திருக்கோயிலை மீண்டும் புதுப்பித்து நன்னீராட்டினால், இலங்கை யில் வாழும் சைவர்களின் துயரங்கள் நீங்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழக மற்றும் ஈழத்து மீனவர்களின் நீண்டகால வழிபாட்டுத் தலமான இதனை மீட்பது காலத்தின் கட்டாயம் எனவும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருச்சிற்றம்பலம்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புதிய துணைவேந்தராக பேராசிரியர் தி.வேல்நம்பி அவர்கள் பதவியேற்பு





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 11 ஆவது துணை வேந்தராகக் வணிகத் துறையின் மூத்த பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி அவர்கள், கடந்த 25.03.2026 அன்று காலை 09.30 மணியளவில் முறைப்படித் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பதவியேற்பு நிகழ்விற்கு முன்னதாக, பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள அருள்மிகு பரமேசுவரன் திருக்கோயிலில் விசேட திருமஞ்சன வழிபாடுகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து, மங்கள வாத்தியங்கள் முழங்கச் சிறப்பு ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட பேராசிரியர் வேல்நம்பி அவர்கள், துணைவேந்தர் அலுவலகத்தில் முறைப்படி ஆவணங்களில் கையொப்பமிட்டுப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார்.

வலிகாமம் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தனது ஆரம்பக் கல்வியைப் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியிலும், மல்லாவி மத்திய கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். வணிகத்துறையில் இளங்கலைப் பட்டம் பெற்ற இவர், சென்னை வரை சென்று தனது உயர்கல்வியைப் பூர்த்தி செய்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவனாகத் தடம் பதித்து, இன்று அதன் தலைவராக உயர்ந்துள்ள இவரது பயணம் வியப்பிற்குரியது. முகாமைத் துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் முதல் கலாநிதியாக, முதல் பேராசிரியராக, முதல் மூத்த பேராசிரியராக மற்றும் இருக்கைப் பேராசிரியராக வணிகத் துறையில் இருந்து உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியாய் முதல் தெரிவு செய்யப்பட்டுப் பன்முகம் காட்டும் இவர், அப்பீடத்தின் பீடாதிபதியாகத் தொடர்ந்து மூன்று முறை தெரிவு செய்யப்பட்ட ஒரே நபர் என்ற பெருமைக்கும் உரியவர். இவர் பீடாதிபதியாக இருந்த காலத்தில்தான் பல இளம் புலமையாளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தமது மேற்படிப்புகளை மேற்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசாவின் பதவிக்காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, சனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களினால் அடுத்த மூன்று வருட காலப்பகுதிக்காகப் பேராசிரியர் வேல்நம்பி நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர், பல்கலைக்கழகப் பதிவாளர் சிவத்திரு. காண்டீபன், பீடாதிபதிகள் மற்றும் பல்கலைக்கழகச் சமூகத்தினர் பெருந்திரளாகக் கலந்துகொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

அந்தவகையில், சிறந்த சைவத் தமிழ் அறிவும் பேச்சாற்றலும் கொண்ட பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி அவர்கள், எமது அடையாளத்தையும் சமயத்தையும் பல்கலைக்கழகத்தினூடும் தமிழுலகிலும் மேன்மையடையச் செய்து, குடும்பத்தாருடன் சீரும் சிறப்புமாக வாழ்ந்திட எல்லாம் வல்ல பரமேசுவரப் பெருமானிடத்திலும், தென்னாடு ஐம்பூதநாதரிடத்திலும் மனமார விண்ணப்பம் வைத்து மகிழ்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்

# கலாநிதி ந.வி.மு. நவரெத்தினம் ஐயா அவர்கள் சிவபதம் ஏகினார்



சைவம் மணக்கும் நயினையம் பதியில் தோன்றிய, இலங்கையின் மூத்த ஓதுவாரும், இசைப் பேராசானும், ஓய்வு நிலை யாழ்ப்பாண பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவருமான, கலாநிதி ந.வி.மு. நவரெத்தினம் ஐயா அவர்கள் கடந்த மாசித் திங்கள் தேய்பிறை பதிற்றோருமை பிறைநாளில் சிவபதம் ஏகினார்.

ஐயா அவர்கள் இலங்கைப் பல்கலைக் கழக வரலாற்றில் இசைத் துறையின் முதலாவது மூத்த விரிவுரையாளர் என்ற தரத்தைப் பெற்றதுடன் 1999 – 2004 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். சங்கீத பூசணம், பண்ணிசை உயர் பட்டயம், ஆசிரியர் பட்டயம், இசை முதுதத்துவமாணி, இசைக் கலாநிதி, தெலுங்கு உயர் சான்றிதழ், ஆங்கில உயர் சான்றிதழ் ஆகிய பட்டச் சான்றி தழ்களை இந்தியாவிலும் இலங்கை யிலும் பெற்றுள்ளார்.

எங்கள் தென்னாடு சிவமடம் ஆரம் பித்து கடவுள் மங்கல நீராட்டு செய்யும் போது ஓதுவாராக திருமுறையை ஓங்கி ஒலிக்கச் செய்தவர். தொடர்ந்தும் பல நிகழ்வுகளில் திருமுறைகளை ஓதி அன்பர்களை இசை வடிவில் இறைவனைக் காண வைத்தவர். ஐயாவின் உயிர் எல்லாம் வல்ல ஐம்பூதநாதப் பெருமான் திருவடிகளில் பேரின்பம் அடைய விண்ணப்பம் செய்து வேண்டுகின்றோம்.

**திருச்சிற்றம்பலம்**

# கேகாலை தெஹியோவிட்ட அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயில் சிவலிங்கப் பெருமானுக்கு திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா



கேகாலை எவிங்டன் பிரிவு பொரலன்கட தெகியோவிட்ட அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயில் புதிதாக அமையப்பெற்ற சிவலிங்கப் பெருமானுக்கு திருக்குட நன்னீராட்டு பெருவிழா, கடந்த பங்குனி 01ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (2026-03-15) திருவோணம் நாண்மீனும், பதின்மும்மைப் பிறைநாளும் கூடிய, காலை 10.45 தொடக்கம் 11.53 வரையான நல்வேளையில் இடம்பெற்றது.

சிவனொளிபாத மலையின் எதிராக, களனி ஆற்றங்கரை யோரமாக திருவருளுடன் அமையப்பெற்ற இத்திருக்கோயி லானது, கேகாலை மண்ணில், சைவத்தை தழைத்தோங்கச் செய்திடும் நோக்கோடு, ஊர்மக்களின் ஒன்றுகூடிய முயற்சியின் விளைவாகவும், சிவத்திரு. பழனியாண்டி சிவஞானமூர்த்தி அவர்களின் சிவசிந்தனையின் விளைவாகவும் புத்தெழில் கோலத்தில் நிலைபெற்றுள்ளது.

இத்திருக்கோயிலின் கடவுள் மங்கலப் பெருவிழாவானது, சிவத்திரு. பழனியாண்டி சிவஞானமூர்த்தி அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க, தென்னாடு சிவமடத்தினால் செந்தமிழ் மந்திரங்கள் ஒலிக்க ஆற்றி வைக்கப்பட்டது. தொடர்ந்து பன்னிரண்டாம் நாள் சங்குநீராட்டு வழிபாடுகளும் சிறப்பாக இடம்பெற்றன. மேலும் அன்றைய நாளில் 20 இற்கும் மேற்பட்ட அடியார்களும் தீக்கை வழங்கல் வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தது. எழுபது வயதைக் கடந்த மூத்த அடியார்களும் தீக்கை பெற்று பேறடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**திருச்சிற்றம்பலம்**

# இலங்கையில் சைவ ஆதீனங்கள் உருவாக வேண்டி திருமுறை விண்ணப்பமும் யோகர் சுவாமிகள் குருபூசையும்





எல்லாம் வல்ல தென்னாடு ஐம்பூதநாதப் பெருமானின் பெருங்கருணையினால், எங்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில், கடந்த பங்குனித் திங்கள் 15 ஆம் நாள் (29-03-2026), ஆயிலியம் நாண்மீன் கூடிய யோகர் சுவாமிகளின் குருபூசை நன்னாளில்,

- **மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் விளங்க வேண்டியும்,**
- **இலங்கையில் சைவ ஆதீன மரபு மீண்டும் தழைத் தோங்கவும், பல சைவ ஆதீனங்கள் உருவாகவும் குறிப்பாக நல்லை ஆதீனத்தில் மூன்றாவது சன்னிதானங்கள் ஆட்சிபீடம் ஏற வேண்டியும்,**
- **உலகம் குறிப்பாக இலங்கை சார் சைவ அமைப்புகள் சைவம் வளர்க்கும் பணியில் ஒற்றுமையாக ஒருமித்து இயங்க வேண்டியும்**

விண்ணப்பம் வைத்து, திருப்பதிகங்களை முற்றோதல் செய்து வழிபடத் திருவருள் கூட்டியிருந்தது. காலை 9 மணியளவில் விநாயகர் வழிபாட்டுடன் வேள்வி ஆரம்பமாகி, எம்பெருமானுக்கு திருமஞ்சனம் செய்யப்பட்டு திருமுறைகள் விண்ணப்பம் செய்யப்பட்டது.

விண்ணப்பம் செய்யப்பட்ட திருப்பதிகங்கள்

1. **"பொன்னார் திருவடிக்கு" - அப்பர் தேவாரம் (தூங்கானைமாடம்)**
2. **"நினைந்துருகும் அடியாரை" - அப்பர் தேவாரம் (திருநல்லூர்)**
3. **"தம்மானை அறியாத" - சுந்தரர் தேவாரம் (திருவதிகை வீரட்டானம்)**
4. **"நானேயோ தவஞ்செய்தேன்" - மாணிக்கவாசகர் (திருவாசகம் - திரு வேசறவு)**
5. **"துஞ்சலும் துஞ்சலிலாத" - சம்பந்தர் தேவாரம் (நமசிவாயப் பதிகம்)**
6. **"காதலாகிக் கசிந்து" - சம்பந்தர் தேவாரம் (நமசிவாயப் பதிகம்)**
7. **"சொற்றுணை வேதியன்" - அப்பர் தேவாரம் (நமசிவாயப் பதிகம்)**
8. **"மற்றுப் பற்றெனக் கின்றி" - சுந்தரர் தேவாரம் (திருப்பாண்டிக்கொடுமுடி)**
9. **"நமசிவாய வாழ்க " - மாணிக்கவாசகர் (திருவாசகம் - சிவபுராணம்)**
10. **"கல்வாய் அகிலும்" - சுந்தரர் தேவாரம் (திருநெல்வாயில் அரத்துறை)**

விண்ணபத்தைத் தொடர்ந்து, ஐம்பூதநாதப் பெருமானுக்கு சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று, தவத்திரு. யோகர் சுவாமி களின் குருபூசை வழிபாடுகளும் சிறப்பாக இடம்பெற்றன. தொடர்ந்து அடியார் பெருமக்களுக்கு அமுது செய்வித்தலுடன் நிகழ்வு நிறைவு பெற்றது. இந்நிகழ்வில் ஓதுவார் திருமதி. நகுலா தங்கராஜா அம்மையார் அவர்கள் பதிகங்களை ஓதி விண்ணப்பம் செய்திட அவர்களுடன், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் ஐயா அவர்கள், இலண்டனைச் சேர்ந்த சிவத்திரு. நடராஜா அவர்கள் மற்றும் அடியார் பெருமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

**திருச்சிற்றம்பலம்**





# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.    www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



# மீண்டெழுவோம்!

ஈழத்தின் கலை, கலாசார மற்றும் கல்விப் புலத்தின் இதயமாகத் திகழும் யாழ்ப்பாணம், இன்று ஒருவித இனம்புரியாத அச்சத்திலும் திகைப்பிலும் உறைந்து போயிருக்கின்றது. வன்முறைகளும், போதைப்பொருள் கலாசாரமும், குடும்ப உறவுகளுக்குள்ளேயே ஊடுருவி யிருக்கும் கொடூரங்களும் எம்மை ஆழ்ந்த சிந்தனைக் குள்ளாக்குகின்றன.

சைவ சித்தாந்தம் பதி பசு பாசம் என்ற முப்பொருள்களைப் பற்றிப் பேசுகிறது. இதில் **'பாசம்'** என்பது ஆணவம், கன்மம், மாயை ஆகிய தளைகளைக் குறிக்கும். இன்று எம் சமூகத்தைச் சூழ்ந்துள்ள வன்மமும், பேராசையும் அந்த 'ஆணவ' மலத்தின் வெளிப்பாடுகளே!

ஆன்மாக்கள் இந்தப் பாசத் தளைகளிலிருந்து விடுபட்டு இறைவனடி சேர்வதே வாழ்வின் நோக்கம் என்கிறது சித்தாந்தம். ஆனால், இன்றைய சூழலில் மனிதர்கள் பாசத் தளைகளால் பிணிக்கப்பட்டு, அறத்தை மறந்து மறத்தின் வழியே செல்வது வேதனைக்குரியது.

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய ஒரு மண், இன்று ஏன் இத்தனை வன்மத்தைச் சுமந்து நிற்கின்றது? போருக்குப் பின்னும் நீண்ட காலத்தை நாம் கடந்துவிட்ட போதிலும், சமூகக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள விரிசல்கள் இன்னும் ஆறாத வடுக்களாகவே தொடர்கின்றன. குறிப்பாக, இளைஞர்களிடையே பரவிவரும் போதைப்பொருள் பாவனை, வெறும் உடல்நலப் பிரச்சினை மட்டுமல்ல. அது ஒரு சமூகத்தின் ஒழுக்கச் சிதைவின் தொடக்கப்புள்ளியாக மாறியிருக்கின்றது.

இதற்குத் தீர்வாக, நம் முன்னோர் காட்டிய பத்திநெறியும், கூட்டுப் பிரார்த்தனையும் மீண்டும் உயிர்பெற வேண்டும்.

**"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை"**

என்கின்றார் அப்பர் பெருமான்! ஒரு மனிதன் அறத்தின் வழி நின்றால் அவனுக்கு எவ்வித அச்சமும் இல்லை என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. சமூகம் அச்சத்திலிருந்து விடுபட வேண்டுமானால், ஒவ்வொரு தனிமனிதனும் ஆன்ம பலத்தைப் பெற வேண்டும்.

ஆலயங்கள் என்பவை வெறும் வழிபாட்டுத் தலங்களாக மட்டும் எஞ்சிவிடக் கூடாது. அவை சமூக மாற்றத்திற்கான மையங்களாக மாற வேண்டும். ஒரு காலத்தில் கிராமத்தின் ஒழுக்கத்தையும், கல்வியையும், சமூகப் பாதுகாப்பையும் உறுதி செய்தவை எமது வழிபாட்டுத் தலங்களே. இன்று அந்தப் பொறுப்பை ஆன்மீக நிறுவனங்கள் மீண்டும் கையில் எடுக்க வேண்டிய தருணம் இது.

யாழ்ப்பாணத்தின் இந்தச் சமூகச் சீர்கேடுகளைத் தடுக்க சட்ட அடிப்படையிலான இறுக்கமும், சமூக அடிப்படையிலான விழிப்புணர்வும் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் தனிமனித ஒழுக்கமும் அகத்தூய்மையும். **"அன்பே சிவம்"** என்ற சித்தாந்த உண்மையை உணர்ந்து, ஒவ்வொரு வீடும் ஒரு பாடசாலையாகவும், ஒவ்வொரு பாடசாலையும் ஒரு ஆலயமாகவும் மாறும்போதுதான், யாழ் மண் மீண்டும் தனது பழைய பெருமையையும் அமைதியையும் மீட்டெடுக்கும்!

**திருச்சிற்றம்பலம்**

# சிவபுராண விளக்க உரை



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

எம் பெருமானே,

**"பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்**
**புல் ஆகி, பூடு ஆய், புழு ஆய், மரம் ஆகி,**
**பல் விருகம் ஆகி, பறவை ஆய், பாம்பு ஆகி,**
**கல் ஆய், மனிதர் ஆய், தேவர் ஆய்,**
**எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்!"**
**என்று சொல்லுவார். அதில் எம்பெருமானே,**

தண்டபாணி தேசிகர் எழுதுவார், புல்லாகியும் பல வகையான பூண்டுகளாகியும், புழுவாகியும், மரமாகியும், பல விலங்குகளாகியும், பறவைகளாகியும், பாம்புகளாகியும், கல்லாகியும், மனிதர்களாகியும், பேய்களாகியும், பூதங்களாகியும், வலிய அசுரர்களாகியும், முனிவர்களாகியும், தேவர்களாகியும் படைக்கப்பெற்று வருகின்ற அசையும் பொருளும், அசையா பொருளுமாய் இவற்றுள் எல்லா பிறப்புக்களிலும் பிறந்து இளைப்படைந்தேன் என்றவாறு.



பேராசிரியர் சித்தாந்த சைவச் சுடர்மணி மீ.சிவசண்முகம், கோயம்பத்தூர், தமிழ்நாடு.

ஈண்டு கூறப்பட்ட புல் முதலியன செய்யுள் நோக்கி முறை பிறழ வைக்கப் பெற்றன. ஆயினும் முறைப்படுத்தி உரை காண்க என்று சொல்லுவார். இவற்றுள் புல், பூண்டு, மரம் இவை மூன்றும் தாவரங்கள். புழு, பாம்பு முதலியன ஊர்வன. பறவைகளும், விலங்குகளும், மக்கள், தேவர், பேய் முதலிய யாவும் சங்கமங்கள். கல், மலை உயிர்கள் உடம்பொடு கூடி புலப்படுதல் ஆகிய பிறவிக்கு முன்பே மலைதான் இருந்தது. உயிர்கள் அம்மலைகளை சார்ந்து அணுக்களில் புலப்படாது கிடந்தன. பின்னர் பரிபாகம் வந்த காலத்து புல் முதலியனவாக வடிவு கொண்டன.

அறிவு முதிர, முதிர அதற்கு வந்த உடலமைப்பும் வளர்ச்சி பெற்றன. ஆதலின் கல்லை முதற் பிறவியாக கூறினார். கல் முதல் படைப்பு என்பதனை "கல் தோன்றி மண் தோன்றா காலத்தே" என்னும் பழம்பாடப் பகுதி நிலை நிறுத்தும் என்பது தண்டபாணி தேசிகர் உரை.

அருணையார் கல் என்பதனை கல்தானே ஒரு பிறப்பு என்று கொண்டு அதற்கு வளர்ச்சி உண்டென உரைப்பாரும் உளர்.

கல் என்பதனை கல்லில் இருக்கும் தேரை போல என்பார்.

இவ்வாறு **"எல்லா பிறப்பும் பிறந்து இளைத்தேன்"** என்று வருந்துகிறேன். அப்படியானால் இந்த பிறவியை விட்டு நான் எப்போது வெளியே வருவேன், மீண்டும் மீண்டும் ஏதேனும் ஒரு பிறவியில் இந்த உலகத்துக்குள்ளேயே நான் உழன்று கொண்டிருப்பதை விரும்பாத அடியேன் உன்னிடம் இப்போது செய்கின்ற வழிப்பாட்டினாலே தேவரீர் எனக்கு இந்த பிறவியிலிருந்து விடுதலை அளித்து அருள வேண்டுமென்பது விண்ணப்பம்.

**"திணைத் துணையேனும் பொறேன், துயர் ஆக்கையின் திண் வலையே!"** என்பார் நீத்தல் விண்ணப்பத்தில். **"பிறந்து இழைத்தேன் எம்பெருமான்"** அதனால் கடவுள் என்ன செய்தார்?

**மெய்யே:-** என்றும் உண்மைப் பொருளாய் இருக்கின்ற, அநாதிப் பொருளாய் விளங்குகின்ற பெருமானே என்று அர்த்தம்.

**"மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்"**

பெருமானே உன் திருவடிகளை திருப்பெருந்துறையில் யான் கண்டு, அதனால் வீடுற்றேன் என்று சொல்வது. உண்டு பசி தீர்ந்தான் என்று சொல்வது போல கண்டு வீடு உற்றான் என்பது மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் உரை. எனவே இரண்டும் உடன் நிகழ்வு. பெருமானுடைய திருவடிகளை கண்டேன் அதனால் வீடுற்றேன்.

**"கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதனக் கண்டேன்"** என்று சொல்வது போல,

**"காட்டாதன எல்லாம் காட்டி"** என்று சொல்வது போல பெருமான் திருவடிகளைக் காட்டினான். அந்த திருவடிகளை கண்டதனால் உள்ள பயன் வீடுபேறு உற்றேன் என்பதுதான்.

**"மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்'.**
**"உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற"**

**உய்ய:-** அடியேன் உய்யுமாறு.

உள்ளத்துள் ஓங்காரமாய் நிற்றல்:- அகர, உகர,மகர நாதவிந்துக்களாய் நின்று அந்தக்கரணங்களை இயக்கிப் பொருள் உணர்வை தருதல். இதனை யோக நெறியாலும், ஞானத்தினாலும் உணர்வர் பெரியோர். அவற்றுள், யோக நெறியாய் உணர்தல் பாவனை மாத்திரத்தாலேயாகும். ஞானத்தினால் உணர்தலே அநுபவமாக உணர்தலாகும்.

பாவனை மாத்திரத்தில் பெருமானை அனுபவிக்க முடியாது என்பது சித்தாந்த முடிபு. அடிகள் ஞானத்தினால் உணர்ந்த உணர்ச்சியால் அருளுதலின், **'உய்ய'** எனவும் மெய்யா எனவும் போந்த மகிழ்வுரைகள் எழுவவாயின. என்பது அருணையார் உரை.

**"மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்"**

**விடை:-** எருது.

அதனைச் செலுத்துவோனை, "பாகன் என்றது.

**"ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே"**

**ஐயன்:-** தலைவன் என சொல்லும்படி வேதங்கள் சிவபிரானையே தலைவன் என முழங்குகின்றன என்றதாம். இதனை, சுவேதாசுவதரம், அதர்வசிகை முதலிய உபநிடதங் களில் தெளிவாகக் காணலாம். என்கிறார் அருணையார். ஓங்கி, ஆழ்ந்த அகன்ற என்ற மூன்றும், முறையே, மேல், கீழ், புடை என்னும் இடங்களில் பரவியிருத்தல் கூறியவாறு. இங்ஙனம் எல்லையின்றிப் பரந்து நிற்றலை, 'அகண்டாகாரம்' என்பர். நுண்ணியனே என்றது. மேற்கூறியவாறு எங்கும் வியாபகனாய் நிற்றற்குரிய இயைபினை விளக்கிய வாறாம். ஓங்கி ஆழ்ந்த அகன்ற நுண்ணியனாதலையறிந்தே வேதங்கள் உன்னை ஐயா எனத் துதிக்கின்றன. அதனால் பெருமான் உடைய சர்வ வியாபகம் என்பது பெறப்பட்டது.

**"வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா"**

**வெய்யாய்:-** வெப்பமுடையவனே

**தணியாய்:-** தட்பமுடையவனே. இவ்விரண்டும் ஒறுத்தலையும், அருளையும் குறித்துக் கூறியனவாம். இவற்றை முறையே அறக்கருணை மறக்கருணை என்பர். யஜமானன் என்பது ஆரியச் சொல். இயமானன் ஆயிற்று. இஃது உயிருக்குச் சொல்லப்படும் பெயர்.

**"இயமானனாய் எறியுங் காற்றுமாகி"** என்பது அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகம். அறக்கருணை, மறக்கருணை என்பவற்றை உயிர்களோடு வேற்றுமையின்றி நின்று செய்கின்றாய்' என்றதாம்.

**விமலா:-** மலம் அற்றவனே என்பார் மகாவித்துவான் தண்டபாணி தேசிகர். அறுதல் இருவகை, இருந்து அறுதலும், இயல்பாகவே அற்றிருத்தலும் என. இறைவன் இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன் ஆகையால் இங்ஙனம் கூறினார் என்று சொல்லுவார்.

**விடை:-** இறைவன் ஏறி நடத்தும் விடை அறமே வடிவாக உள்ளது. ஆகவே, அதன் பாகனாகிய இறைவன் அறப்பயனாய் அமைந்தவன் என்பது காண்க என்றும் கூறுவார்.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்



**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முறைசெய்வோம்"**

### கண்ணப்பர் பேரருள் பெற்ற காளத்தியில் சுந்தரர் வழிபாடு

சுந்தரர் திருவல்லத்திலிருந்து புறப்பட்டு, வழிநெடுகிலும் உள்ள திருத்தலங்களைத் தரிசித்தவாறே திருக்காளத்தி மலையினை வந்தடைகின்றார். கண்ணப்ப நாயனார் பேரருள் பெற்ற அந்தப் புண்ணிய மலையைக் கண்ட கணத்திலேயே நிலத்தில் உடல் தோய வீழ்ந்து வணங்குகின்றார். பின்னர் மலையேறிச் சென்று, காளத்தியுறைப் பரம்பொருளைப் பெருகும் காதலோடு தரிசித்துப் போற்றுகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு பாடுகின்றார்:

**தடுக்கலாகாப் பெருங்காதல் தலை நின்றருளும் கண்ணப்பர்
இடுக்கண் களைந்து ஆட்கொண்டருளும் இறைவர் மகிழ்ந்த காளத்தி
அடுக்கல் சேர அணைந்து பணிந்து அருளால்ஏறி அன்பாறு
மடுப்பத் திருமுன் சென்றெய்தி மலைமேல் மருந்தை வணங்கினார்**

**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 196)**

**மலைமேல் மருந்தான சிவபெருமானைக் கண்ட சுந்தரர், 'செண்டாடும் விடையாய்' எனும் திருப்பதிகத்தினால் உருகிப் பரவுகின்றார்:**

**செண்டாடும் விடையாய் சிவனேஎன் செழுஞ்சுடரே
வண்டாரும் குழலாள் உமை பாகம் மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்கும் கணநாதன்எம் காளத்தியாய்
அண்டா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே**

**- (சுந்தரர் தேவாரம்: திருக்காளத்தி - திருப்பாடல் 1)**

பின்னர் கருவறையில் சிவலிங்கத் திருமேனிக்கு அருகே, மெய்யன்பே ஒரு வடிவமாக நின்றிருக்கும் கண்ணப்ப நாயனாரின் திருவடி மலர்களைப் பணிந்து பெறற்கரிய பேற்றினைப் பெறுகின்றார். கருவறைப் பிரகாரத்துள் மட்டுமே கிட்டும் இத்தரிசனத்தால் அகமிக மகிழ்ந்த நம்பியாரூரர், அத்தலத்துத் தொண்டர்களுடன் இணைந்து இன்புற்றிருந்தார்.

**வணங்கி உள்ளம் களிகூர மகிழ்ந்து போற்றி மதுரஇசை
அணங்கு செண்டாடெனும் பதிகம் பாடி அன்பால் கண்ணப்பர்
மணங்கொள் மலர்ச்சேவடி பணிந்து வாழ்ந்து போந்து மன்னுபதி
இணங்கு தொண்டருடன் கெழுமி இன்புற்றிருக்கும் அந்நாளில்**

**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 197)**

கண்ணப்ப நாயனார் தன் கண்களை அகழ்ந்தெடுத்துப் பேரருள் பெற்ற அந்த அற்புதப் பகுதியினையும், அங்குள்ள சிவலிங்கத் திருமேனியையும் தரிசித்த சுந்தரர், மிகுந்த பத்தியோடு காளத்தி மலையில் சில காலம் தங்கியிருந்தார்.



## காளத்தியில் கண்ட கேதார, திருப்பருப்பதத் தலங்களின் அருட்காட்சி

சுந்தரர் திருக்காளத்தியில் தங்கியிருந்தபடியே வடதிசையிலுள்ள திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்), திருக்கேதாரம் ஆகிய மலைத்தலங்களை நோக்கித் தொழுது, அங்கிருக்கும் ஈசனை நேரில் காண்பது போன்ற மெய்யுணர்வுடன் திருப்பதிகம் பாடுகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

**வடமாதிரத்துப் பருப்பதமும் திருக்கேதார மலையுமுதல்**
**இடமா அரனார் தாமுவந்த எல்லாம் இங்கே இருந்திறைஞ்சி**
**நடமாடிய சேவடியாரை நண்ணினார் போல் உள்நிறைந்து**
**திடமாம் கருத்தில் திருப்பதிகம் பாடிக் காதல் சிறந்திருந்தார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 198)**

திருக்கேதாரத் திருப்பதிகத்தில், இவ்வுலக வாழ்வின் நிலையாமையைச் சுட்டிக்காட்டி, மானிடப் பிறவி ஒருநாள் மண்ணாவது உறுதி என்பதால், காலம் தாழ்த்தாது அறச்செயல்களைப் புரியுமாறு அறிவுறுத்துகின்றார்:

**வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்**
**பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்**
**தாழாதுஅறம் செய்ம்மின் தடங்கண்ணான் மலரோனும்**
**கீழ்மேலுற நின்றான் திருக்கேதாரம் எனீரே**
**- (திருக்கேதாரம் - திருப்பாடல் 1)**

அறம் செய்யாது பொருள் சேர்ப்பதிலேயே காலத்தைக் கழிப்பவர்களைச் சாடும் ஆரூரர், புண்ணிய நதிகளில் நீராடுவதும் திருத்தல யாத்திரை மேற்கொள்வதும் சித்தத் தெளிவைத் தரும் என உறுதி கூறுகின்றார். இப்பிறவித் துயர் நீங்கப் பருப்பதமும் கேதாரமும் போற்றுதல் அவசியம் என்கிறார்:

**தளிசாலைகள் தவமாவது தம்மைப்பெறிலன்றே**
**குளியீர்உளம் குருக்கேத்திரம் கோதாவிரி குமரி**
**தெளியீர்உளம் சீபர்ப்பதம் தெற்கு வடக்காகக்**
**கிளிவாழைஒண் கனிகீறிஉண் கேதாரம் எனீரே**
**- (திருக்கேதாரம் - திருப்பாடல் 6)**

இறுதித் திருப்பாடலில், அப்பர் பெருமான் மற்றும் ஞானசம்பந்தர் உள்ளிட்ட அடியார் அனைவருக்கும் அடியவன் என்று நெகிழ்ந்து தன்னைக் குறிக்கின்றார். இவ்வாறாக, தொலைவிலுள்ள சிவத்தலங்களைத் தனது ஆழ்ந்த பத்தியால் உள்ளத்திலேயே கண்டு மகிழ்ந்த சுந்தரர், மீண்டும் காஞ்சிபுரம் நோக்கித் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## ஈழத்தின் பாடல்பெற்ற திருத்தலங்களில் ஒன்றான, பாலாவியின் கரைமேல் அமர்ந்து அருளும் திருக்கேதீச்சரநாதர் திருக்கோயில்



(சென்ற திங்கள் தொடர்ச்சி)

**திருத்தல வரலாறு**

இத்தலம் தென்னிந்திய சிவன் கோயில்களுக்கு இணையான பழமையையும் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்களையும், நாயன்மார்களினால் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகவும் ஈழத்துச் சிவபூமியில் சீரும் சிறப்பும் பெற்றதாக விளங்குகின்றது.

இலங்கையில் தோன்றி பல வரலாற்று நூல்களில் இத்தலத்தின் வரலாறு பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. மேகவண்ணன் (கி.பி. 303 - 331) காலத்திலே திருக்கேதீச்சரம் அழகிய கோயிலாக இருந்தது என்ற தாதுவம்சம் கூறுகின்றது. வெகு காலத்திற்கு முன்பே இக் கோயில் மண் மழை பெய்து மணல் மூடிப் பின் காடாய் விட்டது என்று ஒரு கர்ணபரம்பரைக் கதையுமுண்டு அதற்கேற்றால் போல் திருஞான சம்பந்த பிள்ளையும் திருக்கேதீச்சரம் காடாகவே இருந்திருக்கின்றது என்பதை "கருத நின்ற கேதீச்சரம் கருத்தகத்தே கண்ட மறைந்த கேதீச்சரம்" என்ற தேவாரப் பாடலடி யால் உணர்த்தியுள்ளார்.

தமிழகத்தில் 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தராலும் 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனாராலும் திருக்கேதீச்சரம் பற்றி தனித்தனியே திருக்கேதீச்சரம் பற்றி தனித்தனியே பதிகங்கள் பாடியுள்ள போதிலும், திருநாவுக்கரசரால் பாடிய திருவீழிமிழலைப் பதிகத்தில் **"கேதீச்சர மேவினார் கேதாரத்தார்"** என்ற பதிகத்தில் திருக்கேதீச்சரப் பெருமானை உச்சரித்து, இப்பதிகம் பல்லவ அரசர்களின் ஆட்சிக்காலத்தில் ஈழத்தில் நிலை பெற்றிருந்த பழமையும் சிறப்பும் பெற்ற சிவன் கோயில் என்பது உண்மைப்படுத்தப்படுகின்றது. Epigraphia Zeylonica, Vol.111 எனும் நூலின் பக்கம் 150 முதல் 225 வரை அநுராதபுரத்திலும், தென்கோடியிலுள்ள கதிர்காமத்திலும் வாழ்ந்த பௌத்தர் மத்தியிலும் திருக்கேதீச்சரம் பெற்றிருந்த பெருமதிப்பும் சிறப்பும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

அநுராதபுர கல்வெட்டில் **"ஜேதவன ஸ்தூபிக்கு வழங்கப்பட்டுள்ள தானம் ஒன்றினை மீறியவர்கள் மஹாவுது (மஹாதீர்த்தம்) எனுமிடத்தில் ஆட்டினை கொன்ற பாவங்களை அடைவர்"** என்றும், கதிர்காமக் கல்வெட்டில் குறிப்பிட்ட விதிகளை மீறுவோர் மஹா தொடியிலே (மகாதீர்த்தத்தில்) பசுக்களை கொன்றோரது பாவங்களை எய்துவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு கல்வெட்டுக் குறிப்புகளின்படி கி.பி.10ஆம் நூற்றாண்டில் திருக்கேதீச்சரம் புகழ் பெற்ற இடமாக விளங்கியுள்ளது என்பது தெளிவாகின்றது.

கி.பி.10ஆம் நூற்றாண்டின் இறுதிக் கூறில் இலங்கையில் சோழரின் ஆதிக்கம் நிலை பெற்றபோது **"மகாதேவன் கோயில்"** என்று திருக்கேதீச்சரம் அழைக்கப்பட்டுள்ளது. இராசேந்திர சோழனினால் புனரமைப்பு செய்யப்பட்டு, கோயிலில் சந்தி விளக்கு எரிவதற்கு மூன்று வணிக கணங்களுக்கு காசு கொடுத்த செய்தியும், சோழப்பிரதானியான சிறு கூற்ற நல்லூர் கிழவன் தாழிகுமரன் மாதோட்டத்தில் இருந்த கோயிலொன்றுக்கு **"வைகாசி விசாகம் ஏழு நாளும், விழா எடுத்துத் தீர்த்தம் ஆட்டுவிக்க வேண்டும்"** என்ற அறக்கட்டளைச் செய்தியும் சாசனத்தில் கூறப்படுவதால், மாதோட்டச் சிவாலயமாக திருக்கேதீச்சரம் இருந்துள்ளது



என்பதை அறிய முடிகின்றது. மற்றும் சோழர் காலத்தில் 12ஆம் நூற்றாண்டில் சேக்கிழாரால் எழுதப்பெற்ற சைவக்காப்பியமான பெரியபுராணத்திலும் திருக்கேதீச்சரத்தினைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**“சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்**
**திருக்கேதீச்சரத் தண்ணல் செய்ய பாதம்”**

கி.பி 13 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரண்டாம் பாண்டிய பேரரசின் ஆதிக்கத்தின் விளைவாக திருக்கேதீச்சரம், பாண்டிய பெருமன்னரின் ஆதரவினைப் பெற்றிருந்தது. முதலாம் சுந்தரபாண்டியன் காலத்துச் சிதம்பர கல்வெட்டொன்றிலே திருக்கேதீச்சரம் பற்றி குறிப்புள்ளது.

கி.பி 16 ஆம் நூற்றாண்டில் மன்னார் பகுதி போர்த்துக்கேயர் ஆட்சிக்குட்பட்டது. அப்போது அவர்களால் இப் பண்டையத் திருக்கோயில் இடித்து அழிக்கப்பட்டது. இராலி விசுவநாத சாஸ்திரியாரின் சம்பவக் குறிப்பிலே திருக்கேதீச்சரத்தின் ஒரு பகுதியினை 1540இல் கடல் காவு கொண்டதாகக் குறிப்பிடுகின்றார். ஏறத்தாழ 200 ஆண்டுகள் கழிந்த பின் 1894 ஆம் ஆண்டு பண்டைக் கோயில் இருந்த இடத்தைக் கண்டுபிடிப்பதற்கான அகழ்வு ஆராய்ச்சி ஆரம்பமாகி அதன் விளைவாக பழைய கோயிலும் கண்டுபிடிக்கப்பட்டது. அம்மையப்ப முருகர் (சோமாஸ்கந்தர்) வடிவமும் கண்டுபிடிக்கப்பட்டது.

1872 இல் நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்து சமயநிலையில் **“திருக்கேதீச்சரம் எனுந் தேன் பொந்து ஒன்று உளது அங்கு மருந்தொன்ற மறைந்துள்ளது அதனைச் சென்றடையுங்கள்”** என யாழ்ப்பாணச் சைவ மக்களுக்கு விழிப்புணர்ச்சியை உண்டு பண்ணினார். இதன் பின்னர் 1903 இல் புதிய கற்கோயில் உருவாக்கப்பட்டு பல குட நன்னீராட்டு விழாக்களையும் கண்டு வந்துள்ளது.

## மூர்த்தி, தலத், தீர்த்தச் சிறப்புக்கள்

### மூர்த்தியின் சிறப்பு

**இறைவன் பெயர்:-** **திருக்கேதீச்சர நாதன்.**
**இறைவியின் பெயர்:-** **கௌரி அம்மை .**
**கோயில்மரம்:-** **வன்னிமரம்.**

**“மூவெயில் சென்றவன் பற்றி நின்றுறைபதி”,**
**“அண்ணல் நண்ணு கேதீச்சரம்”,**
**“காதலித்துறை கோயில்”,**
**“மாதோட்ட நகர் மன்னித் தேவி தன்னொடும் இருந்த எம் பெருமான்”**

என்னும் சம்பந்த பெருமானது தேவார அடிகள், இறைவன் தனது இறைவியோடு மாதோட்ட நன்னகரில் அடியார்களுக்கு அருள் சொரிந்து ஆன்ம ஈடேற்றம் கொடுப்பதற்காக இவ்விடத்தை விட்டு நீங்காமல் உறைகின்றார் என்ற சிறப்பை உணர்த்திக் காட்டுகின்றார். அவ்வாறே சுந்தரரது பதிகத்திலும் **“பாலாவியின் கரைமேல் திடமாவுறைகின்றான்”** என்ற மூர்த்தியின் அருட்கொடை சிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் சம்பந்தர் பெருமான் திருக்கேதீச்சரப் பெருமானை தம் பதிகத்தில் மாதோட்டத்து அண்ணல், அடிகள், என்றிவ்வாறு போற்ற சுந்தரர் **“மூவரென இருவரென முக்கண்ணுடைய மூர்த்தி”** என்றும் அட்டன் (அட்ட மூர்த்தி) சிரேட்டன் (மேலானவன்) என்ற பெயர்களாலும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

### திருத்தலச் சிறப்பு

இத் தலத்தின் சிறப்பைப் புரிந்து கொண்டு சம்பந்தர் பெருமானும், சுந்தரர் பெருமானும் இராமேசுவரத்தில் இருந்தபடி மானசீகத்தில் மாதோட்டத்தையும் அதில் உறையும் பெருமானையும், பாலாவி தீர்த்தத்தின் மகிமையையும் தனித்தனி பதிகங்களில் பாடிப்பரவினார்கள். இதனால் நாயன்மார்களினால் பாடல் பெற்ற தலமாக புகழடைந்தது. அப்பர், மாணிக்கவாசகர், சேக்கிழார் போன்றோரும் இத்



தலத்தின் பெயரை தங்களது திருப்பாடல்களில் உச்சரித்துப் போற்றியுள்ளனர்.

இத்தலத்தை கேது வணங்கிய பேறடைந்தமையால் **“கேதீச்சரம்”** என்றும் நாகர் போற்றியமையால் **“நாகநாதர் கோயில்”** என்றும், புராதன காலத்தில் **“மகாதுவட்டாபுரம்”** எனவும் சோழர்காலத்தில் இராசராசேசுவரம் எனவும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

### தீர்த்தச் சிறப்பு

இத் தலத்தின் தீர்த்தம் பாலாவி என்ற அழைக்கப்படும் இத் தீர்த்தத்தில் நீராடி பிதிர்கடன் ஆற்றுவோருக்கு காசியில் கடனாற்றும் புண்ணியமும் கிட்டும் என்றும், பாவ மற்றும் கிரகக் குற்றங்கள் என்பவற்றை போக்கும் மகிமை பெற்றது என்றும் நாயன்மார்களின் பதிக வாயிலாக அறிய முடிகின்றது.

சம்பந்தர் ஒரு பாடலில் மட்டும் இத் தீர்த்தத்தின் மகிமையை **“தத்தர் மன்னு பாலாவியின் கரையிற் கேதீச்சரமடை மின்னே”** என்று ஓத, சுந்தரர் பல இடங்களில் இத் தீர்த்தத்தின் மகிமையையும் புகழையும் ஓதியுள்ளார்.

**“பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரை”**
**“பரிய திரை எறிய வரு பாலாவியின் கரை”**
**“பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரை”**


### பூசைகளும் விழாக்களும்




வருடாவருடம் வைகாசி விசாகத் தினமன்று 10ஆம் நாள் தீர்த்தத் திருவிழாவுடன், பெருந்திருவிழா நடைபெறும். இத்திருக்கோயிலில் பெருஞ்சிவனிரவு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. நாட்டில் உள்ள சகல பாகங்களி லிருந்தும் சில அடியார்கள் இங்கு வந்து இவ்விரதத்தை அனுட்டிப்பது சிறப்பாகும். தைப்பூசம், பங்குனி உத்தரம், மார்கழித் திருவாதிரை, திருவெம்பாவை பாடுதல் உட்பட சகல விரத வழிபாடுகளும், விழாக்களும் நடைபெற்று வருகின்றன. அத்துடன் ஆறுகால, தினப்பூசைகள் இடம் பெற்றும் வருகின்றன.

### தலமகிமை பற்றிக் கூறும் நூல்கள்

திருக்கேதீச்சர தல வரலாறு பற்றிக் கூறும் பழம் பெரும்



நூல்கள் அழிந்துவிட்டன. தற்போது எஞ்சியவற்றுள் தட்சணகைலாய மகாத்மியம், மாந்தை பள்ளு, சம்பந்தர், சுந்தரர் போன்ற சமயகுரவர்கள் பாடிய திருக்கேதீச்சரத் திருப்பதிகம் என்பன குறிப்பிடத்தக்கவை. இவற்றை விட பிற்காலத்திலும் இவ்வாலயம் தொடர்பாக பல நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் திருக்கேதீச்சர நாதர் திருப்பதிகம் (1949), திருக்கேதீச்சரநாதர் கிள்ளை விடு தூது (1963), தீருக்கேதீச்சரநாதர் ஊஞ்சல் (1966), திருக்கேதீச்சரபுராணம் (1970), திருக்கேதீச்சரத்துக் கௌரிநாயகி பிள்ளைத் தமிழ் (1976) என்பனவும் குறிப்பிடத்தக்கவை.

### திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

1890 இல் திருக்கேதீச்சர தலத்தை நிர்வாகம் செய்ய பல சைவப் பெரியோர்கள் முன் நின்று பாடுபட்டார்கள் அவர்களுள் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவர் தலைமையில் திருப்பணிச் சபை



உருவாக்கப்பட்டு, கருங்கற்திருப்பணிக்ள மேற்கொள்ளப்பட்டு திருக்கேதீச்சரம் கருங்கற்கோயிலாகக் கட்டப்பட்டு பூசைகள், திருவிழாக்கள் நடைபெற்று வந்துள்ளது. இன்று திருக்கேதீச்சர யாத்திரை செய்வோர் தங்குவதற்குரிய திருமடங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. மற்றும் கோ இல்லம், அன்னதான மடம், நூல்நிலையம், சைவப்பாடசாலை, மருத்துவமனை என பல சமயம் சார்ந்த சமூகப்பணிகளையும் புரிந்து வருகின்றன. தற்போது மன்னார் மாவட்டத்தின் சைவசமய முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வரும் சபையாகவும் விளங்கி வருகின்றது.

"சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச்சரத்து அண்ணல் செய்ய பாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும்
உலவாத கழி பெற்றார் உவகை உற்றார்"

(முற்றும்)

திருச்சிற்றம்பலம்

# கடல்கடந்த யாழ்ப்பாணப் பண்பாடும் இலக்கியமும்




### அறிமுகம்

**'அப்பால் நிலம்'** என்ற கருத்தாக்கம் 'கடலாற் பிரிவுண்ட நிலப்பகுதி' என்பதையே இங்கு குறித்துநிற்கிறது. 'அப்பால் நிலக்கோயில்' என்பது 'கடலாற் பிரிவுண்ட நிலப்பகுதியில் அமைந்த கோயில்' என்பதைக் குறிக்கிறது. கப்பலசைவின் காரணமாக, அப்பால் நிலத்துக் கோயில்களுடன் சமய பண்பாட்டுத் தொடர்புகளைப் பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ்ப் புலவர்களும் புலமையாளர்களும் பேணியுள்ளனர். யாழ்ப்பாணத்தவரின் திருமறைக்காட்டுப் பாரம்பரியம், அதனுடனான ஊடாட்டம், அது குறித்த இலக்கியப் பங்களிப்பு ஆகியவை பற்றிய விரிவான ஆய்வுக்கான முன்வரைபு முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது. அந்த வகையில், இப்பொருள் குறித்த ஓர் அறிமுக எழுத்தாக இது அமைகிறது.

### அப்பால் நிலக்கோயில்களும் பண்பாட்டு உறவும்

சைவ மறுமலர்ச்சி இயக்கம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற காலத்தில் தமிழ்நாட்டுடனும் இந்தியாவின் பிறபகுதிகளுடனும் ஈழத்தவர் மேற்கொண்ட சமய, சமூக, பண்பாட்டுத் தொடர்புகளும் அவற்றால் விளைந்த நன்மைகளும் ஏராளமானவை.

தமிழகத்தில் உள்ள பல கோயில்கள் யாழ்ப்பாணத்தவருடன் மிக நெருக்கமானவை. குறிப்பாகச் சிதம்பரம், திருமறைக்காடு, இராமேசுவரம், திருச்செந்தூர், எட்டிகுடி முதலாய இடங்களுடன் யாழ்ப்பாணத்தவருக்கு நீண்டகால ஊடாட்டம் உள்ளது. திருமறைக்காடு ஈழத்தவருக்குரியது என்பது வரலாற்று அடிப்படையாகவும் ஆவணங்களின் அடிப் படையிலும் நிறுவப்பட்ட ஒன்று. யாழ்ப்பா ணம் வரணி கரணவாய் ஆதீனமே திரு மறைக்காட்டை நிர்வகிக்கும் முழுமையான உரித்துடையது.




கலாநிதி
செல்லத்துரை சுதர்சன்
மூத்த விரிவுரையாளர்
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
இலங்கை.


### மறைசைப்பதி எனும் திருமறைக்காடு

மறைசையானது **'திருமறைக்காடு'**, **'சத்தியகிரி'**, **'வேதவனம்'**, **'வேதாரணியம்'** எனப் பல சிறப்புப் பெயர்களைக் கொண்டது. தமிழ்நாட்டில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்தது. கடற்கரையையொட்டியது. சோழநாட்டின் தென்கரைத் தலங்களில் 125ஆவது தலமாக விளங்குவது. இத்தல இறைவன் – திருமறைக்காடர் (வேதாரண்யேசுவரர்), இறைவியார் – யாழைப் பழித்த மொழியம்மை, கோயில் மரம் – வன்னிமரம், தீர்த்தம் – மணிகர்ணிகை. **'இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் பூசித்த தலம் என்பதால் வேதாரண்யம்'** (கஜேந்திரன், வேதை. 2009:8-9) எனப் பெயர் பெற்றது.

பரஞ்சோதி முனிவரின் திருமறைக்காட்டு புராணம் இத்தலத்துக்கேயுரிய தலபுராணம். அம்பிகைக்குரிய 64 சத்தி பீடங்களில் **'சுந்தரி பீடம்'** என்ற சிறப்பும் இத்தலத்துக்குரியது. சப்தவிடத் தலங்களில் ஒன்றான இத்தலம், பாடல்பெற்ற தலங்களில் முதன்மையானது. **'வேதங்களால் பூட்டிய கதவை'**, திறப்பதற்கும் மூடுவதற்கும் முறையே அப்பரும் சம்பந்தரும் பாடிய செய்தி இத்தலத்திற்குரியது. அப்பர், **'பண்ணின் நேர்மொழியாள்'** எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடிக் கதவினைத் திறந்ததும், சம்பந்தர் **'சதுரம்மறை தான் துதி செய்து வணங்கும்...'** எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடிக் கதவை மூடியதுமான செய்தியைப் பெரியபுராணம் பதிவுசெய்துள்ளது. இச்செய்தி, வடமொழியில் அமைந்த வேதங்களுக்கு நிகரான அல்லது மேலான சத்தி, தமிழில் அமைந்த திருமுறைப் பாடல்களுக்கு உரியதென்பதையே நிலைநிறுத்துகிறது. வரலாற்றுச் செய்திகள், தொன்மக் கதைகள், புராணக்கதைகள் ஆகியவற்றை ஏராளமாகக் கொண்டது, இத்தலம்.


தொடரும்..


திருச்சிற்றம்பலம்

# உருத்திரஞ் சொல்லிக் கருத்துமைந்த எம்பிரான் உருத்திர பசுபதி நாயனார்



நாம் அனுதினமும் பாவங்களைச் செய்கிறோம். அவ்வாறான பாவங்களை நிவர்த்தி செய்வதற்கு ஓதப்படுவதே திருநாவுக்கரசரால் 6ம் திருமுறையில் **"நின்ற திருத்தாண்டகம்"** ஆக அருளிச் செய்த உருத்திர பாராயணம். அதனைச் செய்வோரும் செய்விப்போரும் எல்லாப் பாவமும் நீங்குவர். பிணிகளிலிருந்து விடுபடுவர். நீண்ட ஆயுளைப் பெறுவார் என்பதை தமது வாழ்வியல் ஊடாக வாழ்ந்து காட்டியவரும் **"முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கு மடியேன்"** என்று திருத்தொண்டத் தொகையில் போற்றப்பட்டவரும்



செல்வி.
நவிசா ஈஸ்வரானந்தம்
கலைமாணி

**அந்தாழ் புனல் தன்னில் அல்லும்**
**பகலும் நின்று அதரத்தால்**
**உத்தாத அன்பொடு உருத்திரஞ்**
**சொல்லிக் கருத்தமைந்த**
**பைந்தார் உருத்திர பசுபதி**
**தன்னற் பதிவயற்கே**
**நந்தார் திருத்தலை யூர் என்று**
**உரைப்பர்இந் நானிலத்தே**

என திருத்தொண்டர் திருவந்தாதியில் சிறப்பிக்கப்பட்டவராகவும் விளங்கியவர் உருத்திர பசுபதி நாயனார். இவர் பொன்னி நதியால் வளம் சிறந்து விளங்கும் சோழ நாட்டில் தலைசிறந்து விளங்கும் திருத்தலையூரிலே அந்தணர் குலத்தில்

தோன்றினார்.

இவர் மலைவல்லியைப் பாகமாகக் கொண்ட சிவபிரானிடத்தில் தூய அன்புடன் அடிமைத் திறம் பூண்டு வந்தார். உருத்திரன் என்றால் துன்பங்களினின்றும் விடுப்பவன் என்று பொருள். சிவபெருமானுக்கு உருத்திரம் கண்ணாகவும், நமசிவாய மந்திரம் (பஞ்சாக்கரம்) கண்மணியாகவும் விளங்கின. எம்பெருமானுடைய பெருமையை சொல்லும் இம்மந்திரமே வேதத்தின் மெய்ப் பொருளாகும் என்பதை அறிந்து கொண்டு இத்திருமந்திரத்தை தனது உயிரின் மேலாக கருதி வந்தார். இவர் தமது மரபிற்கு ஏற்ப வேத சாத்திர, இதிகாச புராணங்களில் சிறந்த புலமை பெற்றிருந்தார். அருமறைப் பயனாகிய உருத்திரம் என்று சேக்கிழார் சுவாமிகளால் பாராட்டப் பெற்றுள்ள இத்திருமந்திரத்தையே தமது மூச்சாகக் கொண்டு ஒழுகி வந்தார் பசுபதியார். இவர் மனத்தாலும் வாக்காலும் மெய்யாலும் சிவத்தொண்டு புரிந்து வந்தார்.

இவர் தினந்தோறும் தாமரைப் பொய்கையில் நீராடி கழுத்தளவு நீரில் நின்று கொண்டு தலைக்கு மேல் கை குவித்து உருத்திர மந்திரத்தை ஓதுவார். இரவு பகல் பாராமல் எந்நேரமும் உருத்திரத்தைப் பாராயணம் செய்வதிலே தம் பொழுதெல்லாம் கழித்தார் என்பதை சேக்கிழார் திருத்தொண்டத் தொகையில்,

**ஆய அந்தணர் அருமறை உருத்திரங் கொண்டு**
**மாய னார்அறி யாமலர்ச் சேவடி வழுத்தும்**
**தூய அன்பொடு தொடர்பினில் இடையறாச் சுருதி**
**நேய நெஞ்சின ராகிஅத் தொழில்தலை நின்றார்**
**- (திருத்தொண்டர் புராணம் 12:17:4)**

என அழகாக எடுத்தியம்பியுள்ளார். அவரது திருமந்திர பாராயணமானது அரும் தவமாகிறது. தவம் செய்து எம்பெருமானை மகிழ்வித்த பலனை அடையத் துவங்கினார். அதாவது உருத்திர பசுபதி நாயனார் செய்து வந்த திருமந்திர பாராயண மானது எம்பெருமானின் திருவுள்ளத்தை மகிழச் செய்தது.

கழுத்தளவு நீரில் அத்தவச்சுடர் நிற்பதை **"நீரிடை நெருப்பு எழுந்தனைய"** என்று காட்டுவார் தெய்வச் சேக்கிழார். நான்முகனைப்போல திகழ்கின்றார் நாயனார். அந்த வேத மந்திரத்தை நியதியுடன் ஓதிய நிலையோடு பெருமானது **"ஆடு சேவடி அருகுற அணைந்தனர்"** என்கிறார் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

உருத்திர பாராயணத்தை உள்ளன்போடு இடையறாது நாயனார் செய்து வந்ததால் பரமேசு வரனை மகிழ்வித்தது. அதைத்தான் சேக்கிழாரும், **"உமை இடம் மகிழ்ந்தவர் உவந்தார்"** என்கிறார். மறையின் பயனாக உருத்திர மந்திரம் திகழ்வதைச் சேக்கிழார் பெருமான்,

**அரு மறைப் பயன் ஆகிய உருத்திரம் அதனை**
**வரு முறைப் பெரும் பகலும் எல்லியும் வழுவாமே திருமலர்**
**பொகுட்டிருந்தவன் அனையவர் சில நாள்**
**ஒருமை உய்த்திட உமை இடம் மகிழ்ந்தவர் உவந்தார்.**

என்கிறார். இவ்வாறு இரவும் பகலும் முறை வழுவாது உருத்திர பாராயணம் செய்தமையால், உலகத்தோர் அவரை உருத்திர பசுபதியார் என்று அழைக்கலாயினர். உருத்திர பசுபதியாரின் திருவுருவத் திருமுன் தாராசுரம் கோயிலில் காணப்படுகின்றன. இதில் பூ, வாத்து, மீன்கள் நிறைந்த குளத்தினுள் நின்றவாறு இருகைகளையும் தலைமேல் உயர்த்தி வணங்கி உருத்திரம் ஓதி உருத்திர பசுபதியார் நிற்கிறார். எதிரே சிவனும், உமையும் இடபத்தின் மேல் அமர்ந்து உருத்திர பசுபதியாரை வாழ்த்தும் காட்சி இடம்பெற்றிருக்கும்.

அடியார்கள் பத்தியோடு வழிபட்டு எம்பெருமானின் திருவுள்ளத்தை மகிழச் செய்ய எம்பெருமான் திருவுள்ளம் கனிந்து, பசுபதியாருக்குப் புரிந்த பேரருளால் புரட்டாசித் திங்கள் புரவி (அச்சுவினி) நாண்மீன் நன்னாள் அன்று சிவப்பரம்பொருளின் திருப்பாதங்களை அடைந்தார்.

**திருச்சிற்றம்பலம்**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)



பவானி சிவ
அ.வேலுச்சாமி

**திருநகரச்சிறப்பு: பாடல் 40**

**"அவ்வுரையில் வருநெறிகள் அவைகளுநற்க: அறநெறியின்**
**செவ்வியஉண் மைத்திறம்நீர் சிந்தைசெயாது உரைக்கின்றீர்**
**எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித் தாம்இடரால்**
**வெவ்வுயிர்த்துக் கதறிமணி எறிந்துவிழுந் ததூவிளம்பீர்"**

**பொருள்:-** அமைச்சர்களே! நீங்கள் சொல்லிய அவ்வுரைகளின்படி வரும் விதிகள் ஒருபுறம் நிற்க: தரும் வழியின் சிறந்த உண்மைத் தன்மையை மனத்துள் கொள்ளாது நீங்கள் இவ்வாறு மொழிகின்றீர்கள் (அவ்வுண்மைத் தன்மை யாது? என்பீராகில்) எந்த உலகில் எந்தப் பசு இத்தகைய துன்பத்தாலே பெருமூச்செறிந்து கதறி வந்து அரசவாயிலில் ஆராய்ச்சி மணியை அசைத்து வீழ்ந்து பதறிற்று? இதனை ஆய்ந்து சொல்லுங்கள்.



சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்

**வி.உரை:-** எந்த உலகத்தில் எந்தப் பசு இத்தகைய துன்பத்தாலே பெருமூச்செறிந்து கதறி வந்து அரசவாயிலில் ஆராய்ச்சி மணியை அசைத்து வீழ்ந்து பதறிற்று? இதனை நீர் விளம்புங்கள் என்று அரசன் அமைச்சர்களை நோக்கி வினவியது.

**விளம்பீர்:-** இல்லை என்று எனக்குத் தெரியும். உண்டானால் நீர் விளம்புங்கள் என்றபடி மனிதற்குரிய அறிவு விளக்கம் இப்பசுவில் காணப்பெற்றபடியால் இதன் கன்றைக் கொன்றது சிசுகத்தி என்னும் மனிதரக்கொலையே போல்வதாம் என்ற குறித்தார். அறிவு விளக்கத்தினாலே அஃறிணையாகிய பசுவும் உயர்திணையின் இடத்தைப் பெற்றதாம். இங்கு அறிவு விளக்கமாவது தனக்கு நேர்ந்த துன்பத்தை வெவ்வுயிர்த்தல் - கதறுதல் முதலிய புறச்செய்கைகளினால் அறியச் செய்வதும், மணி எறிதலால் அதற்குப் பரிகாரம் தேடுதலுமாம்.

**பாடல்:- 4**

**"போற்றிசைத்துப் புரந்தரன்மால் அயன்முதலோர் புகழ்ந்திறைஞ்ச**
**வீற்றிருந்த பெருமானார் மேவிஉறை திருஆரூர்த்**
**தோற்றம் உடை உயிர்கொன்றான் ஆதலினால் துணிபொருள்தான்**
**ஆற்றவுமற்று அவற்கொல்லும் அதுவேயாம் எனநினைமின்."**

**பொருள்:-** முன்னே இந்திரன், பிரமன், விட்டுணு முதலிய தேவர்கள் வணங்கும்படி எழுந்தருளியிருந்த வீதிவிடங்கப்பெருமான், விரும்பி எழுந்தருளியிருக்கும் தலமாகிய திருவாரூரிலே பிறந்த உயிரைக் கொன்றவன்

இம்மைந்தன் ஆதலின் அவனை கொல்வதே துணியப்படுபொருள் என்று நினைமின்.

**வி.உரை:-** வீற்றிருந்த பெருமான்:- தேவர்கள் துதிக்கத் தேவலோகத்தில் இருந்து செய்தியைக் குறிக்கும்.

**உறை திருவாரூர்:-** நிலைத்து எழுந்தருளியிருக்கும் இடமாகிய திருவாரூர் உறை என்ற வினை எச்சம் மூன்று காலத்துக்கும் பொருந்தும். எனவே இதற்கு முன்னும், இப்போதும் போல, முசுகுந்தச் சக்கரவர்த்தியின் பூசை உந்து இனியும் இனியும் நிலையாக குலைத்து, இங்க எழுந்தருளியிருப்பர் என்பதும் பெறுகின்றாம்.

**திருவாரூர்த் தோற்றமுடை உயிர்:-** முத்திபெறும் குச்சயமுள்ள பக்குவமடைந்த ஆன்மாக்கள் தான் திருவாரூரிலே பிறக்கும். ஆரூர்ப் பிறக்க முத் தி, தில்லை காண முத் தி, காசியில் இறக்க முத் தி என்பது வரலாற. திருவாரூரில் பிறந்ததாலே அவ்வான்மா முத் தியடைதல் நிச்சயம். ஆதலின் அவ்வாறு பிறந்த ஓர் உயிரைக் கொல்லுதல் முத்தனாகும். ஒருவனைக் கொலை செய்ததாகும். எல்லாக் கொலையும் பெரும் பாவமே என்றாலும் ஆரூர்ப் பிறந்த உயிர்க்கொலை மிகப்பெரும் பாவம் என்பது கருத்து. **“திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்”** என்னும் திருவாக்குக் காண்க. இக்கருத்தையே பின்னர்த் **“தண்டியடிகள் திருவாரூர்ப் பிறக்கும் தவமுடையார்”** என்பதும் காண்க.

**நிலைமின்:-** பன்மை ஏவல் வினைமுற்று மந்திரிகள் அனைவரையும் நோக்கி முன்பாட்டிலே இப்பச அறிவும் பக்குவமும் முதிர்ந்தது என்று சொல்லி இப்பாட்டிலே அஃது எவ்வாறாயினும் திருவாரூர்ப் பிறக்கும் தவமுடையது என்று முடித்துக்காட்டி ஆதலினால் அது காரணம் கொண்டு துணிபொருளாய்த் தான் தீர்மானித்ததை முடிந்தபொருளாக அரசன் உரைக்கின்றான். ஆதலின் ஏவல் வினையால் கூறினார்.

**பாடல்:- 42**

**எனமொழிந்து “மற்றிதனுக் கினியிதுவே செயலிவ்வான்**

**மனமழியுந் துயரகற்ற மாட்டாதேன் வருந்துமிது**

**தனதுறுபே ரிடர்யானும் தாங்குதே கரும்” மென**

**அனகனரும் பொருள்துணிந்தான் அமைச்சரும் அஞ்சினர் அகன்றார்.**

**பொருள்:-** “இனி இதற்குச் செய்யக் கடவதாகிய செயலாவது இஃதேயாகும். இந்தப் பசு மனம் அழிகின்ற துன்பத்தை நீக்கமாட்டாதவன் ஆயினேன். ஆதலின், இஃது அடைந்த பெரும் துன்பத்தை நானும் தாங்குவதே செய்பொருளாம்” என்று சொல்லி அரசன் செய்தற்கரிய செயலைத் துணிந்துகொண்டான். அதுகண்டு அமைச்சரும் அஞ்சினராகி அகன்றனர்.

**வி.உரை:-** யானும்: பசு தாங்கவதோடு நானும்: இறந்தது தழுவிய எச்ச உம்மை. துயர் அகற்றமாட்டாத தான் அத்துயரை யானும் தாங்கிப் பங்கிட்டுக்கொண்டு அதன் துன்பத்தைக் குறைப்பேன் என்று துணிந்தார். இப்பசவின் உறுபேரிடரை அகற்ற இயலாத வழி அத்துயரை நானும் தாங்கி நின்ற அதனோடு அனுபவித்துக் கூறுகொண்டு குறைப்பேன் என்பது அரசன் கருமாமனக் கொண்ட குறிப்பு.

**அனகன்:-** பாவமில்லாதவன் அரசனும் கொலை துணிந்தானாதலின் இச்செயலும் மகன் செயல் போன்று பாவச்செயல்தானே என்று ஐயமுறுவார்க்கு இஃது அவ்வாறு ஆகாது என்க. மகனைப் பாவச் செயலின் பொருட்டுத் தண்டித்து அவனது உயிர் நரகத்துள் புகாது அரச தண்டனையின் வழி அதற்கு நற்கதி அளித்தலாலும் பசுவின் துயரத்தை பகிர்ந்து கொள்வதன் மூலம் ஓர் உயிரினது துன்பத்தைக் குறைத்தாலும் இஃது **“புண்ணியமேயாம்”** என்க இஃது பற்றியே இங்கு அரசனை அனகன் என்று பெயராற் கூறினார். 11ம் திருமுறையில் நம்பியாண்டார்நம்பிகள் அப்பர்சுவாமிகளை “அனகன் வார்கழல் சூழன்” என்று அனகன் என்ற பெயரால் போற்றுகின்றார்.

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**சிவபெருமானைச் சிவபெருமான் என்னும் திருப் பெயரினால் வழிபடாது இறைவன், கடவுள், தெய்வம் என்றெல்லாம் வழிபடுவதில் ஏதேனும் இடர் உண்டா? ஒருசிலர் சிவபெருமான் பல்லாயிரம் பெயர் உடையவன் என்றும்,எந்தப் பெயரில் எப்படி வழிபட்டாலும் ஒன்றுதான் என்றும் கூறுகின்றனரே? இஃது ஏற்புடையதா?**

**(சென்ற திங்கள் தொடர்ச்சி)**

**பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்பது அறிவு**

என்றும், திருவள்ளுவர் நாயனார் செம்பொருளை உணர்ந்தோரே பிறவாதப் பேரின்பப் பெருவாழ்வு பெறுவர் என்று உள்ளங்கை நெல்லிக்கனியாகச் சிவபரத்துவத்தை உணர்த்தியருளியுள்ளார். செம்பொருள் என்பது செம்மை செந்தழல் செந்நிறம் முதலியவற்றுடன் சம்பந்தமானது. சிவபெருமான் செம்மேனியராக அருள்பாலிப்பது தாமே செம்பொருள் என்பதனை உணர்த்துவதற்கேயாம். எனவேதான், செம்பொருட் துணிவேயென்று அருளாளர் போற்றிசெய்தனர். அப்பர்பெருமான்,

**மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி**
**மயானத்தான் வார்சடையா னென்னி னல்லான்**
**ஒப்புடைய னல்லனோ ருருவன் அல்லன்**
**ஓரூரன் அல்லனோ ருவமன் இல்லி**
**அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்**
**அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்**
**இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்**
**இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே**

என்று அருளிச்செய்துள்ளது இவ்விடத்தில் சிந்திப்பது நன்று. **‘அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்’** என்று அப்பர்பெருமான் அருளிச்செய்துள்ளதை நினைவுகூர்ந்துதான் இத்தேவாரத்துக்குப் பொருள் கொள்ளுதல் வேண்டும். அஃதாவது, சிவபெருமானின் அருளில்லாது சிவபெருமான் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று கூறமுடியாது என்பதுதான் அப்பர்பெருமானின் அருள்வாக்கு. இன்னும் சிறப்பாகச் சொல்வதெனின், பாச பசு அறிவுகளால் சிவபெருமானின் இயல்பை உரைக்கமுடியாது என்பதும், **‘அவனருளாலே அவன் தாள் வணங்கி’** என்பதற்கு அமைவாகச் சிவபெருமானின் அருள்வயப்பட்டுப் பதியறிவில் அழுந்தி நிற்போருக்கே சிவபெருமானின் உண்மையியல்பு துலக்கமுறும் என்பதுமே இத்தேவாரத்தின் உயர்ந்த பொருளாகும். எங்கள் நாயன்மார் அனைவரும் பதியறிவில் அழுந்தி நின்றோரேயாம். “எனதுரை தனதுரையாக” என்ற தமிழ்விரகர் அருள்வாக்கால் இவ்வுண்மையை நன்கு தெளியலாம். எனவே, பாச பசு அறிவுகளால் அறியப்பட முடியாதவன் சிவபெருமான் என்று **‘மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி மயானத்தான்’** என்னும் தேவாரத்தில் சுட்டியுணர்த்திய அப்பர்பெருமான், **‘சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்’** என்று பதியறிவில் அழுந்தி நின்று எமக்கு அருளிச்செய்திருப்பதே நாம் தலைமேற் கொண்டொழுகவேண்டிய உண்மையாகும். செம்மேனி என்பது அருளையே மேனியாகக் கொண்டவன் என்பதும் ஆதலால் சிவனெனும் திருப்பெயர் உடையவன் என்பதும், செம்பொருளே சிவம் என்பதும் இதனால் நன்கு விளக்கமுறும். எனவே, சிவபெருமான் என்னும்போது செம்பொருள் என்பதே பொருளாவதால், சிவபெருமான் என்னும் சொற்பதத்தில் பேராயிரமும் அடங்கி நிற்பது கண்கூடு.

இறைவன், கடவுள், ஆண்டவன், பரம்பொருள் என்பவை சிவபெருமானுக்குரிய பொதுப்பெயர்களாகவும் சிவன் என்பது சிவபெருமானுக்குரிய சிறப்புப்பெயராகவும் விளங்குவது இதனால் நன்கு விளக்கமுறும். உண்மையை நன்கு துலக்கமாக விளக்குவது சிறப்பு என்றும், நுண்மையாக விளக்குவது பொது வென்றும் கூறப்படும். ஒருவர் நடந்துவரும்போது யாரோவொருவர் வருகின்றார் என்று அறிந்துகொள்வது பொதுவென்றும், இன்னார் வருகின்றார் என்று தெளிந்து கொள்வது சிறப்பென் றும் பொது சிறப்பை விளங்கிக்கொள்ளலாம். எனவே, இறைவன்,கடவுள்,பரம்பொருள் முதலியன பொதுவென்றும், சிவம் என்பதே சிறப்பென்றும் நன்கு விளக்கமுறும். அருளாளர் திருமுறைகளிலும் தோத்திரங்களிலும் சிவபெருமான் பொதுவாகவும் சிறப்பாகவும் போற்றப்பட்டிருப்பதுகொண்டு, இக்காலப் போலிச்சாமியர் பலரும் சிவபெருமானைச் சிறப்புப்பெயர் கொண்டு துதிக்கத்தேவையில்லை என்றும் பரம்பொருள் கடவுள் முதலிய பொதுப்பெயரினால் துதிப்பதே போதும் என்றும் பலவாறு குழப்புவர். அத்தகையோர் புறநெறியில் உழலாது, சைவத்திருநெறி கூறும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நாற்பாத நெறிநின்று உயர்வதே தமிழர் கடனாகும்.


**‘இறைவனே இறைவனே’** என்றும் **‘பரம்பொருளே பரம்பொருளே’** என்றும் துதிப்பதே போதுமானதென்று உழல்வோர், யானையின் ஒரு பாகத்தைக் கண்டு அதனையே யானையின் முழுவடிவென்று வாதிப்போராம். எனவே, அத்தகையாரினைச் சார்வதும் நம்மைப் பாழாக்கும் என்று துணிக. உயிரானது சார்ந்ததன் வண்ணமாம். எனவே, நல்லாரைக் காண்பதும் நன்றே நலம்மிக்க நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே என்பதுபோல் தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற தீயார் சொல் கேட்பதுவும் தீதே என்பதுபோல், திருமுறை நெறியினைச் சார்ந்து நிற்பதே நமக்குப் பயனாகும். நிறுவனமயப் போலிச்சாமியார்களின் போலியுரைகளைச் சார்வது நம்மைப் பாழாக்கும்!

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Are we living Tamil Culture or Mereley Performing It?

Culture has never been as prominent in the Tamil diaspora as it is today. We celebrate our festivals in grandeur, our cultural attire is featured prominently in our social media profiles, and our Tamil pride is amplified in our public spaces. However, the question which lingers in the background of it all is: are we really living our culture, or are we just merely performing it.

We cannot deny that Tamil identity is being not only presevred but expressed through the Diaspora. Pongal events are packed, temples filled with devotees and pictures of traditional clothing take up social media.

However, expression is not the same as understanding. Culture has become event-based rather than value-based for many people. It is experienced in bursts rather than being a constant presence in people's lives. Tamil is enacted on the stage but avoided in conversation. Traditions are shown but not taught. Culture in this way is in danger of becoming something that is shown rather than something that is lived.

Ask the diasporic youth about Tamil movies, they will answer. If you ask then about songs, they will answer. But if you turn the topic to history or Saiva Philosophy their thoughts run dry. This not a failure by the youth themselves but a failure of the people and system around them. We have prioritied celebration over education, and in doing so, we have created a version of culture that is visually strong but intellectually fragile.

Living Tamil culture is not about how loudly we celebrate, its about how deeply we understand it. It is about speaking Tamil even when it is inconvenient, about choosing to save the language in our daily interactions, not just in formal situations. It is about grasping the philosophy that underlies our beliefs, not simply conducting ourselves in a ritualistic manner. But above all that is finding out what it truly means to be Tamil and to understand the thousands of years of history and culture that makes what we have so special.

Now this does not mean that celebration is bad. It is highly commendable that the diasporic youth are so passionate and comfortable with their background, especially in a world where assimilation may seem to be easier than preservation. These manifestations of pride, be it in terms of festivals, music, dress, or events, are significant in keeping the Tamil culture alive. But celebration is where it should begin, not where it should end. Unless there is a move beyond celebration, these manifestations may be seen as a fleeting experience, not a long-term connection. Real cultural preservation is about moving beyond this enthusiasm and creating a knowledge, language, and value system that goes beyond the stage.

# Saiva Saint Rudra Pasupathi Nayanar - The Scholar



The Periya Puranam places Rudra Pasupati Nayanar as the 16th among the sixty three Saivite saints, within the Chola country at Tiruttalayur. His account is framed through Vedic observance, at a point where earlier modes of worship and the temple-centred order are understood as continuous in practice. The narrative does not extend outward into institutional roles or episodic service. It remains fixed on discipline, and on the conditions under which that discipline is sustained.



Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu

The figure presented here is that of a brahmin scholar formed by Vedic learning. His central observance is the chanting of the Sri Rudram, described in the supplied text as a crest jewel of the Yajur Veda and as upholding the Siva Panchaksaram. The theological setting is clear. The Lord is not confined to one register of being. The account states that the divine immanence extends across what is high and low, and that nothing in creation is negligible because all stands within the enclosure of the Lord. In this telling, Rudra Pasupati Nayanar's practice derives its significance not from public action

or institutional office, but from total adherence to that vision.

The account records a procedure carried out without deviation. Pasupati Nayanar stands in neck deep water within a lotus pond and recites continuously, by day and by night, with his mind fixed on Sivaperuman. The recitation does not break. The discipline is exact in both speech and body. The setting enforces stillness, restricts movement, and binds attention to a single act. The observance is undertaken according to injunction and preserved without lapse.

The setting of neck deep water is bound to the discipline itself. Periya puranam notes that standing in such water causes transformation in the body, and that the recitation of manthiram under those conditions yields great result. Whether stated in scriptural or practical terms, the larger point remains the same. Rudra Pasupati Nayanar's devotion is carried through exact repetition under conditions of bodily austerity. The account does not disperse its attention into multiple episodes. It remains fixed on one act, maintained with sufficient purity and steadiness to define the saint entirely.

## The lack of test

The Puranam does not record a separate test, interruption, or adversarial episode in the manner seen in certain other Nayanmar accounts. No king intervenes, no rival obstructs, and no crisis restructures the sequence of devotion. The austerity is itself the proving ground. In the absence of a distinct ordeal, the article leaves the discipline to bear that weight. Rudra Pasupati Nayanar's test, lies in the sustained exactness of the observance itself: to remain in the pond, to preserve concentration, and to continue the recitation without lapse.

The conclusion follows directly. Pleased with this unwavering discipline, Sivaperuman bestows His grace upon Pasupati Nayanar and grants him a place at the Lord's feet. The account does not extend beyond this recognition.

## Remembrance

Rudra Pasupati Nayanar's remembrance rests in the preservation of Vedic devotion within the Saivite sacred order. His distinction lies not in public confrontation, institutional office, or dramatic sacrifice, but in the uninterrupted austerity of recitation. The account preserves him as one whose life joined scriptural utterance, bodily discipline, and inward concentration into a single act of worship. That is the basis on which he is remembered on Purattasi-Asvini star, year on year.

# யாழ் பல்கலைக்கழக முதலாவது சைவசித்தாந்த ஆய்வு மாநாட்டில் பேராசிரியர் நல்லூர் ச.சரவணன் அவர்களின் ஆதார சுருதி உரை



பேராசிரியர் நல்லூர் ச.சரவணன்
தலைவர் - சைவசித்தாந்த துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

ஆதார சுருதி உரையானது இரண்டு சிந்தனைகளை உங்களுக்கு முன்வைக்கின்றது. ஒன்று நம்முடைய மரபானது அல்லது தமிழர் தத்துவ மரபு என்று சொல்லப்படுகின்ற சைவசித்தாந்தம் எப்படிப்பட்ட சிந்தனையை உலக அளவில் தற்கால சூழமைவை எதிர்கொள்கிறது. அல்லது தற்கால சூழமைவிற்கு எப்படி தன்னுடைய கருத்தியலை வழங்கியிருக்கிறது என்பதனை நாம் தெரிந்து கொள்கின்ற ஒரு அடிப்படை வரலாற்றையும், நம்முடைய கருத்தியல் அல்லது கொள்கை விளக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டது என்பது தான் என்னுடைய இரண்டு வகையான செய்திகளாக அமையும்.

அதாவது வரலாற்றையும் நாம் உடன் கொள்ளுவது என்பது காலந்தோறும் சைவசித்தாந்தம் சூழமைவை எப்படி எதிர்கொண்டு வளர்ந்து வந்தது என்பதனை புரிந்து கொள்ளுவதற்கான ஒரு அமைப்பு.



தொகுப்பாளர்
செல்வி. சதீஸ்வரன் டிலக்ஷனா
நான்காம் வருட மாணவி
யாழ் பல்கலைக்கழகம்

இரண்டாவது சைவசித்தாந்தம் தன்னுடைய கொள்கையை இந்த உலகிற்கு வழங்குகிற அந்த முறையானது அல்லது கொள்கைகளை வைத்திருக்கின்ற அந்த அடிப்படையானது எப்படிப்பட்ட ஒரு சமூக உறவைப் பேணுகிறது அல்லது இந்த உலகத்தினுடைய போக்கை எப்படி அது சமூகத்தினுடைய நிலைநிறுத்தலுக்கு அல்லது சமூகத்தினுடைய ஒரு சமன்மைக்கு உதவுகிறது என்பதை நாம் பார்க்கவேண்டும்.

அந்தவகையில் இரண்டாவது சிந்தனையை நாம் மேற்கொள்ள வேண்டும். முதலாவதாக வரலாற்றை நாம் உடன்கொண்டு சைவசித்தாந்தத்தினுடைய போக்கை உணர வேண்டும். சைவசித்தாந்தம் என்கிற இந்த ஒரு கொள்கைக்கான பெயரானது ஒரு இடைக்காலத்திலே நமக்கு கிடைக்கிற ஒரு பெயர். இதனுடைய வரலாற்றை நீங்கள் கொஞ்சம் நீண்ட அல்லது தொல்பழங்கால மரபுகளோடும் கூட உள்வாங்கி அதனை நீங்கள் இணைத்துப் பார்க்க முடியும். அதற்கான செய்திகள் அல்லது தரவுகள் இன்றைக்கு நமக்கு நிறைய கிடைக்கின்றன.

முதலாவது நமக்கு கிடைத்திருக்கின்ற தொல்பழங்கால வரலாறான ஹரப்பா அல்லது சிந்துவெளி நாகரீகத்தினுடைய வரலாற்றில் கிடைக்கின்ற எச்சங்களும் அதனோடு கூட இணைவாக இருக்கிற செந்தமிழ் நாடு மற்றும் இலங்கை சார்ந்த அந்தத் தரவுகளும் கூட நமக்கு எப்படிப்பட்ட தமிழர் வாழ்வியலை எடுத்துக்காட்டுகின்றன என்பதை நாம் சிந்திப்பது மிக முக்கியமானது. இதற்கான தரவுகளில் கருத்துவேறுபாடுகள் இருந்தாலும் கூட நீங்கள் சிந்திக்க வேண்டிய ஒரு மிக முக்கியமான கட்டம் ஒன்று இருக்கிறது. அதாவது

தமிழர் என்கின்ற ஒரு அடையாளத்தில் அவர்கள் நாகரீகமாக தங்களை ஒரு வரலாற்றில் தொல்பழங் காலத்திலிருந்து தொடர்புபடுத்திக்கொள்ள எத்தகைய அடிப்படைகளில் நாம் தரவுகளை இந்தச் சமூகத்திற்கு எடுத்துக்காட்டவேண்டும் என்பதை புரிந்து கொள்வது.

திட்டமிட்டு வரலாற்றை பேசுகிறவர்கள் இந்த சமயம் சார்ந்த செய்திகளை இந்த சமூகத்திற்கு நினைக்கவிடாமல் அல்லது அதை எடுத்துக்காட்டவிடாமல் தொல்வரலாற்றை விளக்கப்படுத்துவது என்பன மேற்கொள்வது என்பது ஒரு தவறான அணுகுமுறை அல்லது அது ஒரு போக்கை மறுக்கிற ஒருமுறையும் கூட. ஆதலினால் ஒரு சமூக உருவாக்கம் அல்லது நாகரீகத்தினுடைய அடித்தளம் என்பதை நாம் அவதானிக்கும் பொழுது தமிழ் சமூகத்தினுடைய நாகரீகம் அல்லது இன அடையாளத்தினுடைய மிகத்தொல் பழங்கால கூறாக இருக்கிற நாகரீகத்தினுடைய தொடக்கமாக இருக்கிற செய்திகளையும் நீங்கள் உள்வாங்கிக்கொள்ள வேண்டும்.

அப்படி உள்வாங்கிக்கொள்ளும் போது தான் அந்த வரலாற்றினுடைய மூலத்தில் விவசாய உற்பத்தி அதாவது வேளாண் உற்பத்தி இது சார்ந்து ஏற்பட்ட சடங்கு முறைகள் அதைத் தொடர்ந்து ஆண் சமூகம் தங்களை முறைப்படுத்திக் கொண்ட முறை இவற்றை எல்லாம் நினைத்தால் வரலாறு உங்களுக்கு இரண்டு செய்திகளைத் தருகிறது.

இந்த வரலாற்றை படிப்பதற்கு உங்களுக்கு நாம் மிகவும், நமக்கு ஆதரவாக இருக்கிற இரண்டு ஆய்வாளர்களை சுட்டிக்காட்டமுடியும். ஒன்று பிரமிலா தாப்பர் அவர்கள் இன்னொன்று தேவிபிரசாத் சட்டோபாத்தியாயர் அவர்கள். பிமிலா தாப்பர் அவர்கள் வரலாற்று ஒருங்கிணைப்பில செய்திகளை வழங்கினாலும், இந்த வரலாற்று ஒழுங்கமைவுக்கு மிகவும் நமக்கு அதிகமான தரவுகளை விளக்கப்படுத்தியிருப்பவர் தேவிபிரசாத் சட்டோபாத்தியாயர் அவர்கள். அவருடைய உலகாயுதம் நூல் மிகமிக முக்கியமான ஒரு நூல்.

இதனுடைய சாரம்சத்தை அடுத்து நாம் தெரிந்துகொள்ளவேண்டிய, நமக்கான தரவுகளை நேரடியாக தொல்லியல் சார்ந்து தருகின்ற நூல்களில் ஆர்.ஜி. பண்டார்கர் அவர்களும் வி.எஸ். பதக் அவர்களும் மிக முக்கியமானவர்கள். இப்பொழுது இந்த தொல்பழங்காலத்தினுடைய சார்பில் வரலாற்றுப் போக்கை உணர்தலில் நமக்கு இருக்கிற ஒரு அடிப்படை, இந்த விவசாய அல்லது வேளான் உற்பத்தி செயற்பாட்டை மேற்கொண்டிருந்த தாய்வழி உரிமை சமூகமானது, இதனுடைய செயற்பாட்டினுடைய அடுத்தகட்ட அமைப்பை எப்படிச் சந்திக்கிறது என்பதைத்தான். ஒரு மேச்சல் சமூகமாக இருந்த ஆண் செயற்பாட்டாளர்கள் அல்லது ஆண் உரிமை கோருகிற ஒரு அமைப்பாளர்கள் இவர்களோடு இணைந்தும் எதிர்த்தும் செய்த முறைகள் எல்லாம் உங்களுக்கு வரலாறு உணர்த்துகின்ற செய்திகள் அதிலே மிக முக்கியமானது.

இந்த விவசாய உற்பத்திக்கான சடங்குகளை எப்படி மேற்கொண்டார்களோ அதே போல் ஒரு ஆண், பெண் என்கிற ஒரு படைப்பு தன்மையை உற்று நோக்கி, அந்த படைப்பு தன்மையினால் பெண்ணானவள் கடவுள் என்பதாக சொல்லப்பட்ட அல்லது கடவுள் என்பதாக வணங்கப்படுகிற அல்லது படைக்கிற ஒரு மூல ஆற்றலாக வணங்கப்படுகிற அந்த நிலைமையிலிருந்து தன்னை மேன்மைபடுத்திக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சடங்கினுடைய வெளிப்பாட்டில் விளைந்ததே தாந்திரீக மரபு .

இந்த தாந்திரீக மரபு நமக்கு எதைக் கற்றுக் கொடுக்கிறது என்று கேட்டால் ஒரு ஆண் தனக்குள் இருக்கிற பெண்மையை எழுப்பி தான் கடவுளாக ஆதல் அல்லது தான் அந்த பெண்ணுக்கு மேன்மையான ஒரு ஆளாக மாறுதல் அல்லது பெண்ணை விடவும் அல்லது பெண்ணுக்கு வேறாகவும் அல்லது பெண்ணுக்கு சமமாகவும் என்பதாக மேற்கொள்ளப்பட்ட அந்த முயற்சிகள் தான் தாந்திரீக மரபை உருவாக்கின. இந்த தாந்திரீக மரபில் அந்த ஆணினுடைய மனநிலை தான் கடவுள் என்பதாக உருவானது.

திருச்சிற்றம்பலம்

# Characteristics of I and others like me

**Previous Month Summary:**

When they met again, Sivakan and his friends reviewed their earlier discussions about the soul's nature. They reaffirmed that the soul exists separately from the body, residing within it and enabling it to function, while the body itself cannot act without the soul. They clarified that the true "I" is the soul, not the body, senses, breath, mind, or any combination of these, nor is it Sivan as a physical or social identity. The soul is the conscious, ever-existing self that uses the body and its faculties as instruments to experience the world. Through this reflection, they also identified three eternal realities, the Lord (Pathi), the soul (Pasu), and the bonds of the world (Paasam), each distinct and serving a unique role.

Through detailed discussion, we reached the conclusion that I, the soul, am distinct from the body, the sense organs such as the eyes and ears, the mind and its internal faculties, the vital breath, and even from the Lord Almighty. The soul is eternal in nature and fundamentally conscious.

From there, our discussion shifted to understanding the different states in which the soul exists.

We had already identified two such states. The first is the primordial state, existing from beginningless time (anaadhi), before the soul was given a body. In this state, the soul's intelligence is completely veiled, preventing it from expressing awareness. The second state occurs when the Lord grants the soul a body and a material world, shaped according to its karma. Both the body and the world arise from primordial matter (maayai). In this state, the soul's intelligence becomes partially manifest, though still limited.

We then considered a further question: what is the soul's condition beyond these two states? The soul, as we understood, is constrained by three fundamental spiritual impurities (mummalam). When the soul is freed from these impurities, it enters a pure state known as suththa nilai.

In this pure state, the soul's intelligence is no longer restricted. It is able to fully know both the Lord Almighty and the impurities that once bound



it. Every individual soul (uyir or jiva) strives towards attaining this state, and it is for this purpose that the Lord bestows His grace.

This led us to ask what truly prevents the soul from knowing the Lord. In its earliest, solitary existence, the soul is enveloped by aanava mala, the primordial impurity. In this condition, its intelligence is completely dormant. This is known as the kevala state.

When the soul is later given a body and equipped with internal and external faculties, it enters the sakala state. In this state, the soul does not yet perceive the Lord or the binding forces of existence (paasam). Instead, it experiences pleasure and suffering as the results of past actions (karma phalam). Once these karmic effects are exhausted through experience, the soul progresses to the suddha state.

Upon reaching the suddha state, the soul no longer undergoes rebirth. It does not assume another body.

Thus, the soul exists across three states: kevala, sakala, and suddha. The sacred journey of the soul is its progression from kevala through sakala, and ultimately to suddha. Every soul continually strives to complete this journey, which the scriptures describe as the "Pilgrimage to Sivapuram." In this way, we explained the three states of existence to our friends.

Saiva Philosophy Reference: The takeaway of this discussion is that the soul is an eternal, conscious reality distinct from the body, mind, senses, and even the Lord, and it progresses through three states of existence: kevala, sakala, and suddha.

# தென்னாட்டு நிகழ்வுகள்

அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில் நான்காம் ஆண்டுநிறைவு சங்குநீராட்டு (29-03-2026)





தென்னாடு பெருஞ்சிவனிரவு நிகழ்வுப் பதிவுகள் (15-02-2026)

# தென்னாட்டு நிகழ்வுகள்



மாசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (02-03-2026)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் அறுபத்து எட்டாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி நிறங்கள்” (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 மீனம் நல்லோரை பங்குனித் திங்கள் 18ம் நாள் நிறைமதி அன்று (01-04-2026 புதன்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org

fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org